# மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்



# மூளாய் வதிரேஸ்வரஸ்தம்

## 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தி விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிரேஸ்வரஸ்தம்

# 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.


---

மூளாய் வதிரன்புலோ பதியில் சித்திவிநாயகப் பெருமானும், முத்துக்குமாரசாமியும் எம்மையெல்லாம் எவ்வித இடையூறும் நேராவண்ணம் காத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை வதிரன்புலோவான் பெயரில் காலத்திற்கு காலம் ஒவ்வொரு தோற்றங்கள் உதயமாவதை கண்கூடாக கண்டு கிழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் இன்று "வதிரேஸ்வரஸ்தம்" என்ற ஓர் இறுவெட்டு வெளியிடுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன், திருவருளை நினைத்து பெருமைப்படுகின்றேன்.

இது போன்ற நல்லன பல உதயமாவதோடு எல்லோராலும் போற்றப்படவேண்டும்.பாடல்களைஇயற்றியவருக்கும், இசையமைத்தவர் களுக்கும் பாடியவர்களுக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டி ஆசீர்வகிக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இப்படிக்கு
**சி. ஜெயானந்தசர்மா**
மூளாய், வதிரன்புலோ
சித்திவிநாயகர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director | 2552643 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2552825 | ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail | hindudir@yahoo.com |
| පොදු / பொது / General | 2552641 | | | වෙබ් අඩවිය / இணையதளம் / Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය / எனது இல. / My No. | | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 01.03.2011 |


# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களில் பழமையும் பெருமையும் மிக்க கிராமங்களில் ஒன்று மூளாய். இங்கு ஆலயம் கொண்டெழுந்தருளியுள்ள சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமி, மகா காளியம்பாள், ஹரிஹர புத்தி ஐயப்பன் ஆகியோரின் மகிமைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா "வதிரேஸ்வரஸ்தம்" மும், சிறப்பு மலரும் வெளியிட உள்ளமை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் இந்து சமயம் பல சவால்களை எதிர் நோக்கியுள்ளது. இந்தச் சவால்களை நாம் முறியடிக்க வேண்டுமெனில் எம்மிடையே புரிந்துணர்வுடன் ஒன்றுபட்டு செயலாற்றும் திறன் அவசியமாகின்றது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற முதுமொழிக்கமைய மூளாயில் அமைந்துள்ள தேவஸ்தானங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு இவ்வரிய செயல் ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள தேவஸ்தானங்களுக்கும் ஒரு முன்மாதிரியாய் விளங்கி நிற்கின்றது. இவ்வரிய செயற்பாட்டை ஒருங்கிணைந்து மேற்கொண்ட நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
*பணிப்பாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்து

இசை எங்கள் ஆன்மீக வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளது. இசைவழியாக எங்கள் ஆத்மவல்லமை காக்கப்படுகின்றது, எங்கள் ஆலயங்களின் மேன்மைகள் நிலைபேறாகின்றன.

இந்தவகையில் மூளாய் கிராமத்து ஆலயங்களின் அழகை, அருளைப்பாடும் ஆக்கங்களின் வடிவாய் "வதிரேஸ்வரஸ்தம்" – ஒலித்தட்டு கைவசமாகின்றமை மனதுக்குகந்தது, மகிழ்ச்சியானது.

இந்த கலையாக்கத்தின் பங்காளராகும் கலைஞர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**இந்து நாகரிகத்துறை**

டாக்டர். **மா.வேதநாதன்** M.A.,Ph.D.,
பேராசிரியர் & தலைவர்

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

## வாழ்த்துரை

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு மூளாய் என்னும் கிராமத்தில் அருள் பொழியும் இந்து ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அவ் ஆலயங்கள் மீது பக்திரசம் மிக்க பாடல்களை இயற்றி அவற்றை "வதிரேஸ்வரஸ்தம்" என்னும் ஒளிப்பதிவு நாடாவாகவும், மலராகவும் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய வளாகத்தில் மூளாய் வாழ் சைவ சான்றோர்கள் வெளியிடவுள்ளதையறிந்து மட்டற்ற மகிழ்வு அடைகின்றேன்.

மூளாயில்லுள்ள சைவப்பெருமக்களும் புலம்பெயர்ந்து வாழும் மூளாயைச்சேர்ந்த சைவப்புனிதர்களும் இணைந்து இவ்வான்மீகப்பணியைச் செய்யமுனைந்தமை போற்றுதற்குரியதும் வாழ்த்துதற்குரியதும்.

இறையருளால் இப் பாடல்களை இயற்றிய கவிஞர் அவற்றையும் மிக அருமையாக இசைஅமைத்த இசைக் கலைஞர்களையும் இவ் விழாவை சிறப்பாக கொண்டாடும் விழாக் குழுவினரையும் வாழ்த்துகின்றேன் வணங்குகின்றேன்.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

டாக்டர் மா.வேதநாதர்.MA.Ph.D.
பேராசிரியர் & தலைவர்
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்பாணம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பழமைவாய்ந்த கிராமங்களுள் மூளாய்க் கிராமமும் ஒன்றாகும் இயற்கை அழகு நிரம்பிய இப்பகுதியிலே நிறைய சைவாலயங்கள் உள்ளன பெரும்பாலான ஆலயங்கள் மீது ஈழத்துப் புலவர் பெருமக்கள் நிறைய இலக்கியங்கள் படைத்துள்ளன மூளாயிலும் முளாயைச் சூழவுள்ள கிராமங்களிலும் பண்டைய காலந் தொட்டே சைவமும் தமிழும் என்ற கருத்து நிலை வேரூன்றியுள்ளமை குறிப்பிடக்கூடியது.

கல்வியும் செல்வமும் நிரம்பி வாழ்ந்த " கணதனவான்கள் " பலர் இப்பிரதேசத்திலே ஆலய திருப்பணிகளையும் கல்விப் பணியையும் செவ்வனவே செய்து வந்துள்ளனர். நமது ஆள்வார்களும், நாயன்மார்களும் தலன்தோறும் சென்று பதியங்கள் பாடி இறைவனை துதித்தனர். இப் பதிகங்களால் இறைவன் புகழ் மாத்திரமின்றி அந்த இடங்களின் புகழும் நிலை பெறலாயிற்று.

மூளாயிலுள்ள சைவ அன்பர்கள் குறிப்பாக இளைஞர்கள் தமது பக்தி யுணவைப் புலப்படுத்த இப்போ பாடல்களைப்பாடி இசையமைத்து இறுவெட்டாக வெளியிடுவதோடு அழகான மலர் ஒன்றினையும் வெளியிடுவதை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

நமது நாட்டுக் கலைஞர்களும், கவிஞர்களும் தம் திறன் காட்டி வெளியிடும் இந்த இறுவெட்டு மேலும் எமது சைவ பாரம்பரியத்தை வளத்து எடுக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன். முளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் முன்றலிலே நடைபெறும் இவ் வெளியீட்டு விழா சிறப்புற அமைய வேண்டு மென்று வாழ்த்துகின்றேன். எல்லாம் வல்ல இறையருள் கிட்டுவதாக .

**பேராசிரியர்**
**ஏஸ்.சிவலிங்கராஜா**
**தமிழ்த்துறை**
**யாழ் பல்கலைகழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கி விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிமேற்கு பகுதியில் மூளாய் ஊரில் திருத்தலம் கொண்டு விளங்கும் தெய்வங்கட்கு சூடப்பட்ட அருட்பாமாலை "வதிரேஸ்வரஸ்தம்" எனும் பெயரில் அச்சுருவிலும் இறுவெட்டிலும் வெளிவருவது காலத்தின் தேவையாகும்.

மூளாயூரில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமானதும், வள்ளிதெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி பெருமானினதும், பொற்புலம்பதி மகாபத்திரகாளியினதும், புட்கலை சமேத ஐயப்ப சுவாமிகளதும் சிறப்பை விளித்து பாடப்பட்ட இப்பாடல்களைத் தொகுத்தவர் உள்ளூர் அடியவர் ஆசுகவி திரு.செ. சிவசுப்பிரமணியம் அவர்கள். இசை வழங்கியவர்கள் உள்ளூரிலும் உலகளாவிய ரீதியிலும் பிரபலமான இசைக் கலைஞர்கள் என்பதும் சிறப்பானதாகும். இதற்கு முன்னரும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் மீது பாடப்பட்ட அருட்பாமாலைகள் இசைப்பதை சாரதா பரஞ்சோதி அவர்களின் குரல் வளத்தால் மெருகூட்டப்பட்டு இசை நாடாவாக வெளிவந்து உள்ளூரிலும் வெளியூரிலும் பிரபல்யம் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் கந்தபுராண கலாசாரம் என மகுடமிடப்பட்ட யாழ்ப்பாண சைவத்தமிழ் பண்பாட்டு அடித்தளம் கேள்விக்குள்ளாகும் நிலையில் இவ்வகையான அருட்பாமாலைகளின் தொகுப்பு இன்றியமையாத செயற்பாடாகும். "வதிரேஸ்வரஸ்தம்" காலத்தால் அழியாத அருட்பாமாலையாக நிலைத்து நிற்க முயற்சி எடுத்த புலம்பெயர் சைவத்தமிழ் அடியார்கள் பங்களித்த கலைஞர்கள் உறுதுணையளித்த உள்ளூர் அடியவர்கள் பாராட்டுதலுக்கும் கௌரவத்துக்கும் உரியவர்கள் இத் திருப்பணிகளில் வாழ்த்துரை வழங்கக் கிடைத்த பாக்கியத்தை மூளாயில் வீற்றிருக்கும் அருளாட்சி நடாத்தும் தெய்வங்களின் திருப்பாதங்களில் காணிக்கையாக்கி அமைகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**திரு.ச. கிருஷ்ணேந்திரன்**
***உதவிப் பிரதேச செயலர்,***
***கிண்ணியா.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான
பரிபாலன சபை
*Moolai Vathiranpulo Sithivinayagar Thevasthana*
**Paripalana Sabai**
தேவஸ்தான பதிவிலக்கம்:- HA/5/JA/642 நிறுவனப் பதிவிலக்கம்:- HA/4/J/170

# "வதிரேஸ்வரஸ்தம்" என்னும் ஞான காவியம்

இந்து சமயத்தில் "எழில் முத்து என்றும், "இரத்தின துவீபம்" என்றும் நாயன்மார்களினாலும் சரித்திர ஆசிரியர்களினாலும் புகழப்பட்ட இலங்கை மணித்திருநாட்டில், இந்து சமயம் வேரூன்றி பெருகி, வளர்ச்சிடைந்து, அதன் அழியாத சான்றுகளும், திரும்பிய திசையெங்கும், திருக்கோயில்கள் அருள்மணம் பரப்பிக்கொண்டிருக்கும், இத்தெய்வீக பூமியாகிய யாழ். குடாநாட்டில், நீர்வளமும், நில வளமும் சீர்சொரிந்த மருதமும், நெய்தலும் அருகிருப்ப, வலிகாமம் மேற்குப் பகுதியில் "மூளாய்" என்னும் திவ்விய ஞானபூமியில் இருகண்கள் போல் விளங்கி ஞானஒளி வழங்கி, அருள்பாலித்துக்கொண்டிருக்கும் "மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர், முத்துக்குமார சுவாமி ஆலயங்களாகும்.

அத்துடன் அல்லாமல் இந்ஞானபூமியின் மூளாய் கிராமத்தில் திரும்பிய திசையெங்கும் அதன் காவல் தெய்வமாக தென்பகுதியில் "ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயமும், கிழக்குப் பகுதியில் பொற்புலம்பதி மகாகாளி அம்பாள்" ஆலயமும் அமைந்துள்ளது. இத்தகைய பேறுபெற்ற திருத்தலங்கள் ஒருங்கே அமைந்த இந் ஞானபூமியின் இந்து ஆலயம் பற்றிய "வதிரேஸ்வரஸ்தம்" என்னும் ஓர் ஒலிப்பதிவு நாடா வடிவில் காலத்திற்கு ஏற்ப, அவ்வாலய பெருமைகளை பறைசாற்றும் வகையில் வடிவமைத்து வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எம்பெருமான் வதிரன்புலோ சித்திவிநாயகர் திருவருள், அருட்கடாட்சத்தினால் எம் இதயத்தில் திருவருள் உந்தலினால் பல எண்ணங்கள் கருக்கட்டிய தொகுப்பே "வதிரேஸ்வரஸ்தம்" என்னும் ஒலிப்பதிவு நாடா. ஏற்கனவே சித்திவிநாயகர் ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைபற்றிய அனைத்து சான்று அடங்கிய "வதிரகானம்" என்னும் ஒலிப்பதிவு நாடா வெளியிடப்பட்டு, அதன் புகழ் பரந்து அகிலமெங்கும் வாழும் மூளாய் மக்களின் மனதில் அழியாத கலைக்களஞ்சியமாக இடம்பெறச் செய்துள்ளது.

இவ் "வதிரேஸ்வரஸ்தம்" என்னும் ஒலிப்பதிவு மேலும்பல சிறப்பு அம்சங்களுடன் கூடிய நிலையில் "சித்திவிநாயகர்" மட்டுமல்லாமல், இக்கிராமத்தின் மறு அங்கமாக விளங்கும் "முத்துக்குமாரசுவாமி" காவல் தெய்வமாக விளங்கும் ஐயனார், காளிகோயில் ஆகிய ஆலயங்களின் மகிமையையும் தொகுத்து வெளியாகும் முதல் காவிய ஒலிப்பதிவு நாடாஸ்ரீ இதுவாகும்.

இன்னும் இது போன்ற பல படைப்புகள் வரவேண்டும். இக்காவிய ஒலிப்பதிவு நாடாவை தொகுத்து, வகுத்து, அமைத்து இசை உருவில் மீட்டித்தந்த, இத்தொகுப்பை வெளியிட முன்னின்று உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எம் சபை சார்பில் நன்றிகள்.

இது ஒரு கருவூல பொக்கிஷமாகும்.

"சித்திவிநாயகர் கருணை மகத்தானது"

*தங்கள் ஆலய சேவையில்*

**க. செல்வராசா**

*செயலாளர்,*

*மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம்*

*பரிபாலன சபை, மூளாய், சுழிபுரம்,*

*இலங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம் வாழ்த்துரை

எமது மூளாய்க் கிராமம் ஏனைய இடங்களுடன் ஒப்பிட்டளவில் இயற்கையில் குறிப்பாக செளிமையான மண் வளம் குன்றிய நில அமைப்பை கொண்டிருந்தாலும் பாரம்பரியமாக அவ்வப்போது ஏற்பட்ட மாறுபட்ட சூழலுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் நேரான யோசனைகளிலான எண்ணக் கருக்களை நோக்கிய எம் முன்னோர்களின் முயற்சியான்மையினால் பல முன்னேற்றச் செயற்பாடுகளை ஆரம்பித்து சமூகத்திற்கு நிலைத்து நின்று தொடர்ச்சியாக பயன் படக்கூடிய வகையில் பொருத்தமான கட்டுமானங்களை அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எமது முன்னோர்கள் தமது திறன் விருத்திய அன்னியர் ஆட்சியில் முறமையான கல்வியால் பெற்ற அறிவினை பயன்படுத்தி தேசிய சர்வதேச மட்டத்தில் தொழில் புரியும் வாய்ப்பினைப் பெற்றனர்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற தமிழனின் முதுமொழிக்கேற்ப மூளாய் சின்னப்பா மயில்வாகனம் நிற்சிங்க முதலியார் தாம் ஈட்டிய பணத்தைக் கொண்டு பொருத்தமான சமூகக் கட்டுமானங்களை அமைத்து சமூக வளர்ச்சிக்கு உதவியதை காணக்கூடியதாக உள்ளது. சர்வதேசத்தில் பெற்ற பரந்த அனுபவ அறிவுடன் பாரம்பரியத்தை சமுதாயத்தை ஒன்று சேர்த்து நீண்டகாலமாக பேணிப்பாதுகாக்கும் வகையில் அமைத்ததுதான் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் அருகில் முத்துக்குமாரசுவாமி ஆலயங்களின் அமைப்பு என்பதை தற்கால புத்திஜீவிகள் மூலம் அறிந்து பெருமையடைகிறேன்.

பாரம்பரியத்தை சமூகமாக ஒன்று சேர்த்து நீண்டகாலம் பேணிப்பாதுகாக்கும் வகையில் தானாகத் தோன்றிய மூளாய் சித்தி விநாயகர் ஆலயத்துடன் ஒருங்கிணைந்து அமைத்த முத்துக்குமார சுவாமி ஆலயத்தின் பௌதீகவளத்தின் அமைப்பு இந்து மதத்தத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வெளியீடு இந்து மத பாரம்பரியத்தை கட்டிக்காப்பதற்கு எமது சந்ததியினருக்கு உதவும் என நம்புகின்றேன். இந்த பாடல் வெளியீட்டினை மூளாயூர் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியத்தால் இயற்றப்பட்டிருப்பது எமக்கெல்லாம் பெருமை யளிக்கின்றது. எமது கிராம மனித வளத்தின் திறனை சமூகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கும் பொறுப்பினை பேரின்பநாயகம் அருளீசன் ஏற்றமை பாராட்டுக்குரியது. தற்போதய நிலையில் நாம் அபிவிருத்தியின் அடுத்த மைல்கல்லை நோக்கி சமூகத்தின் தேவைக்கு ஏற்ப செல்லவேண்டி இருப்பதை அறிகின்றேன். எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு பல்வகைத் துறைகளாலும் சமூகம் சார் கைத்தொழிலை பொருத்தமான தொழில்நுட்பத்துடன் வளத்தெடுப்பதன் மூலம் சுயமாக திருப்தியுடன் வாழ சகல வளங்களையும் ஒன்றிணைத்து செயல்ப் படுத்துவதற்கு இயல்பான செயற்திட்டம் வகுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

ஆழமான கருத்துடன் இயற்றிய சித்திவிநாயகர் திருவூஞ்சல், முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல், கொடிக்கவி, வைரவர் விருத்தம், போன்ற பாரம்பரிய பாடல்களுடன் வரலாற்றையும் வெளிப்படுத்தும் கவியையும் தறபொழுது பன்னிசையில் திறன் விருத்தியுடன் பரவியுள்ள சமூக உறுப்பினர்கள் வெள்ளிதோறும் நடைபெறும் பஜனையில் பங்குபற்றி பாடுவதற்கு சந்தர்ப்பம் அழிக்கின்றது. "வதிரேஸ்வரஸ்தம்" என்ற வெளியீடு இந்துமதப் பாரம்பரியத்தை கட்டிக்காப்பதற்கும் எமது சந்ததியினரை இணைப்பதற்கும் இறைவனை வேண்டுகின்றேன்.

**இ. பொன்மலர்**
தர்மகர்த்தா
மூளாய் வதிரன்புலோ முத்துக்குமார சுவாமி
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை - சமர்ப்பணம்

சமயம் என்பது மனிதர்களை மனுத்தன்மை உடையவர்களாகவும் ஒரு ஒழுங்கமைப்பான வாழக்கை முறைகளை நடாத்துவதற்கு ஒருங்கிடப்படும் அடிப்படைகளாக இருப்பது வரையான காலப்பகுதி முழுவதும் அவனை ஆளுகின்ற ஓர் நெறியாகத் திகழ்கின்றது. ஓர் மனிதன் தான் பின்பற்றுகின்ற சமய நெறியிலிருந்து விலகுவானாக இருந்தான் அவ்ன அச்சமயத்தை பின்பற்றும் சமூகத்திலிருந்து புறந்தள்ளப்படுகின்ற அளவுக்கு சமயம் மனிதனோடு ஒன்றித்துள்ளது.

இவ்வகையில் பரப்பிரம்மாவிடம் இரண்டறக் கலப்பதற்கு ஏங்கி நிற்கும் ஜீவாத்மாக்கள் தங்களுக்கென ஒழுங்கமைத்துக் கொண்ட சமய நெறியில் நின்று பரமாத்மாவை அடைய எத்தனிக்கின்றன. அப்பரம்பிரம்மாவை,சிவனாகவோ, விஷ்ணுவாகவே அம்பிகையாகவோ விநாயகனாவோ வேலவனாகவோ ஐயப்பனாகவோ வைரவராகவோ அல்லது புத்தராகவோ நினைத்து வழிபடுகின்றனர். அந்த வகையில் ஈழத்திருநாட்டின் வடமுனையில் மகுடம் போன்று விளங்கும் யாழ் குடாநாட்டில் சீரும் சிறப்பும் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் மேற்கு பகுதியில் மருதமும் நெய்தலும் அருகிருப்ப நீர்வளமும் நிலளவமும் சீர் செறிந்த "மூளாயம்பதியில்" வதிரன்புலோ என்னும் வயல் காணியை 1710ஆம் ஆண்டு பண்டாபிள்ளை என்பவர் செங்காரபிள்ளை காணியை உழும்போது கலப்பையின் கொழு ஒரு கல்லில் தட்டுப்பட்டு இரத்தம் பீறிட கலப்பையை வெளியில் எடுத்துப் பார்த்தபோது சித்திவிநாயகர் சிலை வெளிப்பட்டு காட்சி கொடுத்தார். அதன் ஆதாரம் இன்னும் சித்திவிநாயகர் சிலையில் கொழுப்பட்ட இடத்தில் காயம் இருந்து சான்று பகிர்கின்றது. மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரின் மகிமைகள் பல உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் வாழ்ந்தால் இப்படித்தான் வாழவேண்டும் என எடுத்துக்காட்டாக அண்ணனுக்குத் துணையாக மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகில் தம்பி மூளாய் வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி ஆலயமும் அமைந்துள்ளது. இரு ஆலயங்களுக்கும் ஒரே திரு வீதி. அதே போன்று பொதுவான சித்திரத்தேரும் வீதிகளில் தலவிருட்சங்களாக அரசு, ஆல், வேம்பு, இலும்பை மரங்களும் சைவ சமய வழிபாட்டு நெறியிலே நீர் எவ்வளவு முக்கியத்துவத்தை மூர்த்தி, தலம் என்பனவற்றோடு தொடர்புபடுத்துவது புனித நீரே "தீர்த்தம்" என நாமம் சூட்டப்படுகின்றது. அதற்கு ஏற்ப வீதியின் இருமருங்கிலும் திரிவேணி சங்கமம், வேதசாகரம் என்னும் தீர்த்தக் கேணிகளும், திருமறை மண்டபமும், அந்தணர் குடியிருப்பும் திறந்தவெளி அரங்கும், மக்கள் பசி துயர் நீக்குவத்றகு பல நோக்கு கூட்டுறவுச் சங்கமும் மூளாய் இந்து இளைஞர் மன்ற நூல் நிலையமும் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

மேலும் மூளாயின் மையப்பகுதியான மூளாய் கிழக்கு பொற்புலம் பதி மகாகாளியம்பாள் ஆலயமும் மூளாய் தெற்கு வயல் நடுப்பகுதியில் ஹரிஹரபுத்திர ஐயப்பன் ஆலயங்களும் அமைந்துள்ளன. இவற்றின் அற்புதங்களும் கிராமத்தின் மகிமைகளையும் தன் கருவறையில் சுமந்து பாடல் வரிகளாக மூளாயூர் ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவரக்ளினால் உணர்ச்சிமிகு உயிரோட்டம் கொடுத்து எழுதப்பட்ட பாடல்களை யாழ். ராஜன்ஸ் இசைக் குழுவினரின் இசையினால் பிரசித்தி பெற்ற பாடகர்கள் மெல்லிசை வாணர் ஜெயா சுகுமார், எஸ்.ஜி.சாந்தன், குமாரசுவாமி, ரகுநாதன் ஜெயரூபன், ஜெகனி, ரொசீட்டா ஆகியோரின் இனிய குரலோசையால் பாடப்பட்டு "வதிரேஸ்வரஸ்தம்" என்ற ஒலிப் பதிவுகளாகவும் மலர்களாகவும் வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம்வல்ல மூளாயில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற தெய்வங்களின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**மூளாய்**

**கா. பார்த்தீபன்**
*தொகுப்பாசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் பாடல்கள்

மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே
மோதகப் பிரியத்தால் மௌனமாய் இருப்பவனே
வேதத்தின் நாயகனே வேண்டிய தருபவனே
ஆண்டியாய் போனதம்பி அருகினில் அமர்ந்தவனே
(மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே)

மண்ணுக்குள் மறைந்திருந்தாய் பிரசவ வலிகொடுத்தாய்
ஏர்ஊர்ந்து மண்பிளக்க பிள்ளையாய் நீபிறந்தாய்
ஊர்மூளாய் வந்துதித்த உத்தம நாயகனே
யார் என்று கேட்பவர்க்கு பிள்ளையார் என்றருள்பவனே
(மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே
மோதகப் பிரியத்தால் மௌனமாய் இருப்பவனே)

பித்தனைப் பொடிபூசும் அத்தனின் மகன்நீயே
பொற்புலம் பதியானின் அற்புத அருள்நீயே
வதிரன் புலோஅமர்ந்த வாரிசே நாயகனே
உதிரம் சொரிந்தெம்மை அதிரவும் வைத்தவனே
(மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே
மோதகப் பிரியத்தால் மௌனமாய் இருப்பவனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிடும் கடலோரம் பொன்னாலை இருந்தவனே
சங்கூரும் வயலோரம் மூளாயூர் அமர்ந்தவனே
எங்களின் நாயகனே ஏர்மீட்ட விநாயகனே
துங்கக் கரிமுகனே தூமணியே மாமணியே

(மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே
மோதகப் பிரியத்தால் மௌனமாய் இருப்பவனே)

பெருங்குளக் கரையோரம் இருந்தெம்மை காப்பவனே
கருவுக்குள் உருவாகி உயிருக்குள் துடிப்பவனே
திருமூளாய் மண்ணளைத்து திருநீறு தந்தவனே
அருவான உருவே எம்வதிரன் புலோவானே.

(மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே
மோதகப் பிரியத்தால் மௌனமாய் இருப்பவனே
வேதத்தின் நாயகனே வேண்டிய தருபவனே
ஆண்டியாய் போனதம்பி அருகினில் அமர்ந்தவனே
மூளாயூர்ப் பிறந்தவனே மூத்த விநாயகனே)

சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ
உளம் நொந்து உருகிநாம் இசைபாடவும்
இசைபாடி அவன்தாளைத்தினம் தேடவும்

சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழில் தனிலொன்றால் எங்களைப் படைத்தவன்
ஐம்புலன் தனுள்நின்று எங்களைக் காப்பவன்
ஐங்கரங் கொண்டெங்கள் அச்சங்கள் அழிப்பவன்
ஐங்கரன் மூளாயூர் விநாயகன் அடிதொழ
சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ

நெருப்பினை உண்கின்ற நிலத்தினைப் படைத்தவன்
நீரினுள் கலந்தெங்கள் உயிரினைக் காப்பவன்
காற்றாக வீதியெங்கும் கயமையை அழிப்பவன்
கஜானனன் மூளாயூர் விநாயகன் அடிதொழ
சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ

ஐம்பெரும் நிலந்தன்னை அவனியில் படைத்தவன்
ஆறுமுகத்தான் உறவை அண்ணனாய்க் காத்தவன்
எழுபிறப்பும் எழும் வினைகளை அழிப்பவன்
எண்ணரும் மூளாயூர் விநாயகன் அடிதொழ
சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ

அறுகினில் தொடங்கி தேவர்வரையிலும் படைப்பவன்
இறுகிடப் பற்றுவோரை இடரின்றிக் காப்பவன்
உறுதுணை யிருந்தெமக்கு வருந்துயர் அழிப்பவன்
நறுந்தமிழ் மூளாயூர் விநாயகன் அடிதொழ
சாந்தி தருமிந்த வதிரன்புலோ
மனச் சாந்தி தருமிந்த வதிரன்புலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம் நொந்து உருகிநாம் இசைபாடவும்
இசைபாடி அவன்தாளை தினம் தேடவும்
சாந்தி தருமிந்த வதிரன்புலோ

வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை
துதித்திடத் துதிக்கரம் துணையாகும் கால்
பதித்திட திருத்தலம் அருள்சேர்க்கும்
இது வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை

வானவர் விழித்தெழும் குரலோசை
அது வையத்தில் இறங்கிடும் வரவோசை
கோயிலைத் திறக்கின்ற கதவோசை
நல்ல அருள்மழை பொழிந்திடும் அருளோசை
இது வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை

நிலமகள் சிரிக்கின்ற சிரிப்போசை
அதுநீர்மகள் சிந்திடும் அலையோசை
வானமும் இசைக்கின்ற வளையோசை
நல்ல காற்றோடு தீயாடும் கதிரோசை
இது வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் நடக்கின்ற நடையோசை
அது எங்களின் இதயத்து துடிப்போசை
ஓமென்று ஒலித்திடும் பொருளோசை
நல்ல வேளமுகன் தரும் சிரிப்போசை

இது வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை

சூரியன் பணிகின்ற மணியோசை
அது சந்திரன் துதிக்கின்ற துதிப்போசை
அசுரரை ஓட்டிடும் அருளோரை
நல்ல வாழ்வினைத் தருகின்ற வாழ்த்தோசை

இது வதிரன் புலோவின் மணியோசை
எங்கள் காதினில் உரைத்திடும் ஒருபாசை
துதித்திடத் துதிக்கரம் துணையாகும் கால்
பதித்திட திருத்தலம் அருள்சேர்க்கும்
அது வதிரன்புலோவின் மணியோசை

மூளாய் விநாயகனே மூத்த விநாயகனாம்
மூளாய் விநாயகனே மூத்திகரம் ஆனவனாம்
மூளாய் விநாயகனே புத்திக்கும் சித்திக்கும் நாயகனாம் தன்மையினால்
வதிரன்புலோ வந்து பணிவீர் கனிந்து.

கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே எங்கள்
மண்ணுக்குள் மறைந்திருந்த மாமணியே
விண்ணிற்கும் தலைவனான வித்தகனே மூளாய்
வதிரன் புலோ அமர்ந்த கணபதியே!

(கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்குள் மறைந்திருந்து நற்றமிழ் தருபவனே
பாவுக்குள் மறைந்திருந்து பாடவும் வைப்பவனே
பூவுக்குள் மறைவதுபோல் பூமிக்குள் மறைந்திருந்து
நோவுக்கும் அஞ்சாமல் ஏருக்குள் எழுந்தவனே!
(கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே)

பழுவினில் குருதியேந்தி அழுதிட வைத்தவனே
எழுதிடக் கொம்பொடித்து ஏற்றங்கள் புரிந்தவனே
உழுகின்ற அடியவர்க்கு உருவத்தைக் காட்டுதற்காய்
கொழுவுக்கு ஆளாகி உழவுக்குள் எழுந்தவனே!
(கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே)

எருதேறி மிதித்திடவும் வருந்தாமல் இருந்தவனே
முருகைக் கல்லுடைத்தோர் முதுகேறி வந்தவனே
பருவமாய் நமதுள்ளம் பழுத்திட வைப்பதற்காய்
பெருங்குளக் கரையோரம் கோயில் கொண்டெழுந்தவனே
(கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே)
வதிரனார் என்றதொரு பெயருக்கு உரியவனே
புதிர்பல பூத்தமூளாய் பிள்ளையார் ஆனவனே
கதிர்வேலன் தம்பியொடு கைகோர்த்து இருப்பதற்காய்
எதிகரறி வந்துமூளாய் பதியிலே எழுந்தவனே
கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே எங்கள்
மண்ணுக்குள் மறைந்திருந்த மாமணியே
விண்ணிற்கும் தலைவனான வித்தகனே மூளாய்
வதிரன் புலோ அமர்ந்த கணபதியே!
(கண்ணுக்குள் மறைந்திருந்த கண்மணியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரன் புலோவானை வானோர் தலைவனை
உதிரம் சொரிந்தெங்கள் உழுநிலத்து எழுந்தோனை
முதிரும் பக்திகொண்டு முன்வந்து தொழுவோர்க்கு
எதிலுமே வெற்றிவரும் எடுத்ததெல்லாம் சித்திவரும்

மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ
ஆளாக்கி எமைக்காக்கும் ஐங்கர ஐயன்நீ
தாளாத அறிவும்நீ தரமான பலமும்நீ
கேளாமல் தருகின்ற கேசவ மருகன்நீ

(மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ)

பொங்கிடும் கடலோரம் பொன்னாலை இருந்தவன்நீ
தங்கியே அருள்வதற்கு மூளாயூர் வந்தவன்நீ
எங்கெங்கும் அதிசயிக்க ஏருக்குள் எழுந்துவந்தே
சிங்கார மூளாயூர் வதிரன்புலோ அமர்ந்தவன்நீ

(மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ)

ஓலைக்குள் ஒளித்திடவும் ஒளிராமல் இருந்தவன்நீ
மாலைக்குள் மறைந்திடவும் மலராமல் இருந்தவன்நீ
காலையில் இன்பலனை கிணற்றுள்ளே ஒளிகாட்டி
சாலைக்குள் வந்துமூளாய் வதிரன்புலோ அமர்ந்தவன்நீ

(மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ)

இன்பலனை நீராடி அன்புற்று இருந்தவன்நீ
துன்பத்தில் துவழ்பவர்கள் துயரினைத் துடைப்பவன்நீ
உன்னுக்குள் உலகமுண்டு என்பதனைக் காட்டுதற்காய்
அன்புற்று மூளாயூர் வதிரன்புலோ அமர்ந்தவன் நீ

(மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரன் புலோ அமர்ந்து வான்புகழ் கொண்டவன்நீ
கதிர்வீசும் வயலோரம் பெருங்கோயில் கொண்டவன்நீ
முதிர்ஞானம் கேட்பவற்கு அருள்ஞானம் தருவதற்காய்
உதிர்ஞான மூளாயூர் வதிரன்புலோ அமர்ந்தவன்நீ!

மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ
ஆளாக்கி எமைக்காக்கும் ஐங்கர ஐயன்நீ
தாளாத அறிவும்நீ தரமான பலமும்நீ
கேளாமல் தருகின்ற கேசவ மருகன்நீ
(மூளாயூர் மூத்தோன்நீ முத்தான அழகன்நீ)

அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்

ஊனோடு உயிருனக்கோர் அரியாசனம்
என் நாவோடு தமிழுனக்கோர் அரியாசனம்
வாயோடு வயிறுனக்கோர் அரியாசனம்
மூளாய் வதிரன்புலோ உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்

நெஞ்சோடு நினைவுக்கோர் அரியாசனம்
என் கையோடு விரலுனக்கோர் அரியாசனம்
கண்ணோடு கருத்துனக்கோர் அரியாசனம்
மூளாய் வதிரன்புலோ உனக்கு ஒரு அரியாசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்

காதோடு புலனுனக்கோர் அரியாசனம்
எனக் மூக்கோடு மூச்சுனக்கோர் அரியாசனம்
மெய்யோடு சிரசுனக்கோர் அரியாசனம்
மூளாய் வதிரன்புலோ உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்

காலோடு மடியுனக்கோர் அரியாசனம்
என் தோலோடு தசையுனக்கோர் அரியாசனம்
தோளோடு மார்புனக்கோர் அரியாசனம்
மூளாய் வதிரன்புலோ உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்

முதுகோடு எலும்புனக்கோர் அரியாசனம்
என் இதயமும் துடிப்புனக்கோர் அரியாசனம்
இடுப்போடு உறுப்புனக்கோர் அரியாசனம்
மூளாய் வதிரன்புலோ உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்
என்றும் நான்தருவேன் உனக்கு ஒரு அரியாசனம்
அரியாசனம் உனக்கு அரியாசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை
ஆளாக்கி வாழவைக்கும் அருள்நிதியே
மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே

பாலோடு பழம்கொண்டு அபிஷேகம் செய்பவற்கு
ஆலோடு இருந்துநல்ல அருள்மழை பொழிந்திடுவான்
காலோடு கைகூப்பி கண்மூடி நினைப்பவற்கு
நாலோடு ஐந்தான கரம்நீட்டி வரம்கொடுப்பான்
(மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை
ஆளாக்கி வாழவைக்கும் அருள்நிதியே)
அட்டாங்க நமஸ்காரம் செய்கின்ற ஆண்களுக்கு
எட்டாத இன்பமெல்லாம் எட்டவே செய்திடுவான்
பஞ்சாங்க நமஸ்காரம் செய்கின்ற பெண்களுக்கு
சஞ்சலம் நீக்கி நல்ல மங்கல வாழ்வருள்வான்
(மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை
ஆளாக்கி வாழவைக்கும் அருள்நிதியே)

பூவோடு ஜலம்கொண்டு பூசைகள் செய்பவற்கு
நாவோடு இருந்துநல்ல நறுந்தமிழ் சுரந்திடுவான்
பாவோடு பொருள்சொல்லி பஜனைகள் செய்பவற்கு
சாவோடு முடியாத சகவாழ்வைக் கொடுத்திடுவான்
(மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை
ஆளாக்கி வாழவைக்கும் அருள்நிதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதங்கள் இருந்து மூளாய் தலம்வரும் அடியவற்கு
நிரந்தர சுகவாழ்வு சூழவே வைத்திடுவான்
கரம்நீட்டி வரம்கேட்டு வதிரன்புலோ வருபவற்கு
பரம்பொருள் தோன்றிநல்ல வரங்களை அருளிடுவான்.

மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை
ஆளாக்கி வாழவைக்கும் அருள்நிதியே
மூளாய் ஊர்க்குமுதல் கணபதியே எம்மை

கஜமுகன் கருணை செய்வான்
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்
பயமுண்டு எமக்கிங்கு தயவுநீ தாவென்றால்
கஜமுகன் கருணை செய்வான்.
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்

தாயோடு தந்தையுமே உலகென்று உரைத்தவன்
தம்பிக்கு நம்பிக்கை கொடுத்தன்று உழைத்தவன்
தீயினை விழுங்கியிந்த தேசத்தைக் காத்தவன்
மூளாயூர் வதிரன் புலோதனில் அமர்ந்தவன்
(கஜமுகன் கருணை செய்வான்
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்)

நம்மானை வழிவந்து நம்மூரை அடைந்தவன்
நம்மூரைத் தன்னூராய் எண்ணியே வளர்ப்பவன்
தம்பனை வயல்களுக்குள் கொழுவினை உடைத்தவன்
மூளாயூர் வதிரன்புலோதனில் அமர்ந்தவன்
(கஜமுகன் கருணை செய்வான்
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்குளக் கரையோரம் தலம்கொண்டு மகிழ்பவன்
வருந்துயர் அனைத்திற்கும் மருந்தாகி இருப்பவன்
அருந்தமிழ் மூன்றையும் விரும்புவோற் களிப்பவன்
மூளாயூர் வதிரன்புலோதனில் அமர்ந்தவன்
(கஜமுகன் கருணை செய்வான்
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்)

இன்பலனை நீர்புகுந்த இருளினைக் களைந்தவன்
தன்னுருவம் காட்டியன்பர் இதயத்துள் புகுந்தவன்
என்பலனை தன்பலனாய் எண்ணியே காப்பவன்
மூளாயூர் வதிரன்புலோதனில் அமர்ந்தவன்
கஜமுகன் கருணை செய்வான்
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்
பயமுண்டு எமக்கிங்கு தயவுநீ தாவென்றால்
கஜமுகன் கருணை செய்வான்.
மூளாய் கஜமுகன் கருணை செய்வான்

மூளாய்நகர் வதிரன்புலோ ஆலயத்தை விரும்பு
மூத்தமகன் கணபதியின் பாதத்தையே வணங்கு
புத்திவந்து கிடைக்கும் சித்திவந்து ஜொலிக்கும்
மூளாய்நகர் வதிரன்புலோ ஆலயத்தை விரும்பு!

அரசமரத் தடியிலவன் முகமமைத்தானே மூளாய்
ஆலமர விழுதிலவன் கரமமைத்தானே
காலமுற்றும் நம்பிவரும் அடியவற்கெல்லாம்
ஞாலவாழ்வு சிறப்பதற்கு வரமருள்வானே.
(மூளாய்நகர் வதிரன்புலோ ஆலயத்தை விரும்பு
மூத்தமகன் கணபதியின் பாதத்தையே வணங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்குளத்து கரையினோரம் அமர்ந்திருந்தானே அப்பன்
அருங்கலைகள் அனைத்தையுமே வளர வைத்தானே
நெருங்கிவந்து துயருரைக்கும் அடியவற்கெல்லாம்
மருந்தவனாய் இருந்துநல் வாழ்வருள்வானே.

(மூளாய்நகர் வதிரன்புலோ ஆலயத்தை விரும்பு
மூத்தமகன் கணபதியின் பாதத்தையே வணங்கு)

முத்தமிழை சொத்தெனவே துலங்கவைத்தானே இங்கே
மத்தளமும் மேளங்களும் முழங்க வைத்தானே
சித்தமுற நித்தம்வரும் அடியவற்கெல்லாம்
புத்திசித்தி தந்துஅவன் வளமருள்வானே!

(மூளாய்நகர் வதிரன்புலோ ஆலயத்தை விரும்பு
மூத்தமகன் கணபதியின் பாதத்தையே வணங்கு)

ஒருபிடிக்குள் தன்னையவன் அடக்கிவைத்தானே பிள்ளை
இருஉலகின் தலைவனென்றும் உணரவைத்தானெ
அருமருந்தாய் அவனையெண்ணும் அடியவற்கெல்லாம்
பெருவாழ்வுடனே வளங்களையும் அவனருள்வானே!

மூளாய்நகர் வதிரன்புலோ கோயில் வர விரும்பு
மூத்தமகன் கணபதியின் பாதத்தையே வணங்கு
புத்திவந்து கிடைக்கும் சித்திவந்து ஜொலிக்கும்
மூளாய்நகர் வதிரன்புலோ கோயில் வர விரும்பு!

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்
வதிரன் புலோவின்வாசல்வந்தாய்
உதிரும் பேரருள் பருகுங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுவினில் குருதி சிந்திய காயம்
இப்போதும் இருக்குது பாருங்கள்
தொழுகின்றபோது எழுகின்ற தோற்றம்
எப்போதும் தெரியும் பாருங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்

அரசடி தன்னில் தன்முகம் அமைத்து
ஐங்கரன் இருப்பான் பாருங்கள்
சிரசினில் குட்டித் தொழுகின்றபோது
கரமொன்று நீழும் பாருங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்

உழுகின்றபோது எழுந்திட்டாய் நீ
விழுந்திட்ட கிணற்றினைப் பாருங்கள்
அழுகின்ற ஓசை கேட்டதை மூத்தோர்
கூறுவர் கேட்டுப் பாருங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்

மூலத்தில் இருக்கும் சாமியின் தோற்றம்
முன்னுக்குத் தெரியும் பாருங்கள்
ஞாலத்து முதல்வனை மூளாயில் தொழுதால்
காலத்தை வெல்வீர் வாருங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்
வதிரன் புலோவின்வாசல்வந்தாய்
உதிரும் பேரருள் பருகுங்கள்

மூளாயூருக்கு வாருங்கள் ஒரு
மூத்தோன் இருப்பதைப் பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்
மூசுறு மேலதைக் காண்பவற்கெல்லா
மூர்த்திகரம் தரும் அருட்கோலம்

மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்

அன்னியர் ஆண்ட இடம்
இது ஆண்டவன் புதைந்த இடம்
ஆலயம் எழுவதற்கும் பெரும் அற்புதம் நிகழ்வதற்கும்
அடியார் அருளால் கூடுமிடம்

அன்பர் அருளால் ஆடுமிடம்
மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்

உழவினில் எழுந்த இடம்
இது கொழுவினை உடைத்த இடம்
பழுவினில் குருதியொடும் பெரும் பானை வயிற்றினொடும்
அடியார் அதிசயம் கண்ட இடம்

அன்பர் அருளால் ஆடுமிடம்
மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்

கிணற்றினில் மறைந்த இடம்
இது ஒளியாய் எழுந்த இடம்
ஊனினை உருக்கிடவம் பெரும் உள்ளொளி பெருக்கிடவும்
அடியார் இறைவனைக் கண்ட இடம்

அன்பர் அருளால் ஆடுமிடம்
மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினை மூட்டுமிடம்
இது ஆனந்தம் கூட்டுமிடம்
வதிரன் புலோவினிலும் வரும்மூளாய் ஊரினிலும்
அப்பன் அருமழை பொழியுமிடம்
அப்பன் அருள்மழை பொழியுமிடம்
மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்
மூசுறு மேலதைக் காண்பவற்கெல்லா
மூர்த்திகரம் தரும் அருட்கோலம்
மூளாயூரின் வதிரன்புலோவில்
மூத்த விநாயகர் திருக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமறை மண்டபமும், இந்து இளைஞர் மன்றமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரிவேணி சங்கமமும், வேத சாகரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ
# ஸ்ரீ சித்திவிநாயகர் திருவூஞ்சல்

சீராருங் கையிலைமலை வாசரீசர்
சிற்பரமரற்புத மெய்ச்சித்தியோங்குந்
தாராருமதவி கடத்தந்தி வக்ரதரர்
தகுவளஞ்செய் மூளாய் நன்னகரமேவி
ஏராரும் புகழ்வதிரன் புரமிலங்கும்
இனியசித்திவிநாயகர் மேலூஞ்சலேத்தக்
காராருமொரு மருப்புக் கருணைஞான
கணபதி தனிருசரணங் காப்பதாமே. 1

## ஊஞ்சல்வர்ணம்

அருமறை கணான்குமுயர் தம்பமாக
ஆறங்கமுபநிடதம் விட்டமாகப்
பொருணிறையுமாகமஞ் சீர்நாணதாகப்
பூரணமார் பிரணவமேபீடமாக
ஊருணிறையும் பஞ்சகலையணிகளாக
யுயளூஞ்சல் தனிவாஞ்சையுண்மை யாகத்
திருநிறையும் வக்ர துண்ட வாடீளூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 2

## கொலுவர்ணம்

சந்திரசூரியர்கவிகை வட்டந் தாங்கத்
தருப்பணமேயாதியன மல்கித்தேங்க
இந்திரனார் வலக்கைதனி லடப்பை தாங்க
எழில்நிருதிகோடிகங்கை யேந்தித்தேங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமார்மதன் பனிநீர்வி சித்தாங்க
சுரமுனிவர் பூதங்கணமெங்குந் தேங்கச்
சிந்தைவளர் வக்ரதுண்ட வாடீரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தியாடீரூஞ்சல். 3

## சம்பிரவர்ணம்

வரமருளு முமைபாகராசி கூட
வாணியுடன் பூமகளுநாண் தொட்டாட்ட
பரமருவுரம்பபையர்கள் நடனமாட
பாவைசித்தி புத்தியர்கள் பாங்குநாட
சருமருவுமாலாத்தி மகளிர்பாட
கணநாதர் மலர்மாரி தூவிநீட
திருமருவுவிநாயகரே யாடீரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 4

## சபாவர்ணம்

மந்திரமார் வேதங்களெங்கு மார்ப்ப
வரமடை வோர்வத வெனப்போற்றி நிற்பத்
தந்திரமாராக நூல் வல்லுனர்கள்
தகுமுறையிற் பூசனைகளன்பினேற்ற
வந்துனடிபணிந்தோமென்னவன்பர்
வணங்கி மலர் தூவியார்ப்ப
சிந்துரமார் பாலசந்திரவாடிரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொரூபவர்ணம்

உருமருவு பணாபரண வாடீரூஞ்சல்
உயராகு வாகனனெ யாடீரூஞ்சல்
கருதரிய பாசாங்குச வாடீரூஞ்சல்
கதிதந்தந்தரித்தவனே யாடீரூஞ்சல்
மருமருவுபிரகாச வாடீரூஞ்சல்
மந்திரமார் பிரணவ யாடீரூஞ்சல்
திருமருவுமானை முகவாடீ ரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 6

## வாத்தியவர்ணம்

பத்திசெறி தவில்படகந்தி மிலைதக்கை
பண்வநாகசுர முறுமி கொம்பும்பை
சுத்தமுறுகுடமுளவு பீலிபாதி
கொடுகட லொடுவமை சொலத்துலங்கியார்ப்ப
மத்தமறுகி தழிமலர் மாலையாட
வளமருவுரம்பையர்கள் கீதம்பாடச்
சித்துலவு கசானனே யாடீரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 7

## ஆலய வர்ணம்

வண்ணமுறு பவளமதினில் புதுக்கி
வளர்படிகச் சுவரெளுப்பி மரகதத்தின்
நண்ணுதரங்கிணி குயிற்றிமணி யினாலே
நவையில்மகுடம் வரையினன்கினாற்றி
தண்ணமுறு சங்கநிதித் தவசியற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளையனக வாலயத் திற்றனைவிளக்கித்
திண்ணமுறுமா யூரவாடீ ரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 8

## நகரவர்ணம்

மந்தியெழுந் தரவிந்தமலரிற்றாவ
மாங்குயில் பூங்காவிருந்து மதனைக்கூவக்
கந்தியிடைச் செங்கயல்கள் சீறிவாவக்
கானமயில்முகில் வரவுகண்டுமேவ
முந்து திருமந்தாரமலர்கள் தூவ
முதிர்மூளாய் வதிரபுர முதல்வதேவ
சிந்துமதக் கணேசநம வாடீரூஞ்சல்
சித்திவிநாயக மூர்த்தி யாடீரூஞ்சல். 9

## வாழி

திருமருவு சித்தாந்த சைவம்வாழி
செகமூலவுமன்னுயிர்கள் சிறந்துவாழி
உருமருவுமூளாய் நன்னகரம் வாழி
ஓங்குவதிரன் புரம்மார் கோயில்வாழி
கருமருவு சித்தி விநாயகம் வாழி
கருணைநெறி மெய்யடியார் கவினும் வாழி
மருமருவுதிருவூஞ்சல் வாழிகேட்போர்
மலிவுபெறப் படிப்போரும் வாழிவாழி. 10

## எச்சரிக்கை

சீரார்தரு கருணாகர சிவனாரருண்மகனே
ஏரார்தருவதிரன்புரத் திறைவா எச்சரிக்கை
புகழ்மேவிய மூளாய்நகர் பொலிஐங்கர முதல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகள்ஞான மெய்வடிவே சிவகுமாரா எச்சரிக்கை
திருமாமறையவர் பூசனைசெயவே யொளிர்புனிதா
வரமார்ந்திடுமுமை பாலகவரதா எச்சரிக்கை
விதிமால்பணி தருசீர்ச்சித்தி விமலாமறை முதல்வா
பதுமலயைமருகா சிவபாலா எச்சரிக்கை.

## பராக்கு

சித்திவிநாயக முதல்வசெல்வா பராக்கு
சிந்துநிதி தந்தருளும் புதல்வா பராக்கு
சுத்தவதிரன்புர மார்சுமுகா பராக்கு
சுரருடனேமால் பணியுசமுகா பராக்கு
தொந்திவயிற்றைந்து கரத்தெந்தாய் பராக்கு
துதிபெருகும் மூளாயின் வந்தாய் பராக்கு
சிந்தைமகிழன்பர் பணிதேவே பராக்கு
சித்திதருசுத்தநிலைக் கோவே பராக்கு
ஐந்தெழுத்தினுட் பொருளாமதிபா பராக்கு
ஆறினுறு மகவிதழினிபா பராக்கு.

## லாலி

மங்குல்பொழி பலவளமை பொங்குதிருமூளாய்
வதிரன்புரந்த நகரதிபவிரதநமதிதயா லாலி
சிங்கமயில் பெருச்சாளி சிந்துர நலிடபம்
தேவருமொரு முதல்வசித்தி விநாயகனே லாலி
அங்கமுறு சித்திரையினமை பறுவதிதியின்
ஆனந்த தீர்த்தமருளையனின்பபாம் லாலி
செங்கலவை சந்தனமுந்திவ்யமருவெக்ஷி
செறிபுயனே ஐங்கரனே தேவநினதபயம் லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பற் பாட்டு

ஏலேலோ ஏகரதம் சர்வாதம் பிரமாதம்
ஏலேலோ தத்தெய்யா ஏலி லலோ
பஞ்ச பூதப்பலகை கப்பலாய்ச சேர்த்துப்
பாங்கான ஓங்குமரம் பாய்மரங்கட்டி
நெஞ்சுமனம் புத்தி ஆங்காரஞ் சித்தம்
மானாபிமானங் கறியாகச் சேர்ந்து
ஐந்தெழுத்தைக் கட்டிச் சுரக்கா வேற்றி
ஐம்புலன் தன்னில் சுக்கானிறுத்தி
நெஞ்சுகடாட்சத்தாற் சீனிப்பாய் தூக்கி
சிவனுடைய திருவருளைச் சிந்தையில் நினைந்து
அஞ்சலான வெள்ளத்திற்றானே
அகண்டரதம் போகுதடா : ஏலேலோ

களவையுங் கோளையுங் தள்ளடா தள்ளு
கருணைக்கடலே தள்ளடா கப்பல்
நிற்குணந்தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்த பரிபூரணத்தாற் தள்ளடாகப்பல் முக்கணை
மூன்றையுந் தள்ளடா தள்ளு
முப்பாழுக் கப்பாலே தள்ளடா கப்பல்
திக்குத்திசை யெங்குந் தள்ளடா தள்ளு
திருமந்திரஞ் சொல்லித் தள்ளடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலுந் தள்ளடா தள்ளு
பரவெளிக்கப்பாலே போகுதடா கப்பல் – ஏலேலோ
தந்தைதாய் சுற்றமும் சகலமுமறந்து
தாரஞ் சகோதரமானதும் மறந்து
விந்தைசேர் மாடமுங் கூடமும் மறந்து
மைந்தருஞ் செல்வமும் வாழ்வும் மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தமும் நேசமும் பாசமும் மறந்து
பதினாறு லோகந்தன்னையும் மறந்து
இந்திரியர் இரட்சித்த கப்பலிலேறி
ஏகாந்தமானதொரு கடலிலே தள்ளி
அந்தரமாவெளி ஆனந்தவெள்ளத்தில்
அழுந்துதையோ கப்பலிதோ – ஏலேலோ

## மங்களம்

மங்களம் மங்களம் நித்தியசுபமங்களம் மங்களம்
கங்கையுன் மைந்தருக் கலைமதிநேர் தந்தருக்குப்
பொங்குமூளாய் வந்தவர்க்குப் புண்யஞானந்தவர்க்கு மங்களம்
சீர்வதிரநாதருக்குச் செங்கமலப் பாதருக்கு
ஏரருளும் போதருக்கு யானைமுக நீதருக்கு மங்களம்
சித்திவிநாயகர்க்கு செய்யவருட்டாயகர்க்கு
சுத்தமலர்ச்சாயகர்க்கு சொல்லருநம் நாயகர்க்கு மங்களம்

## வெண்பா

சீர்பெருகு மூளாயிற்சேர்வதிர நற்புரமார்
ஏர்சித்தி வேழகுக யீசுரர்க்கப்– பார்பெருகும்
வெண்கலிப்பா நானியம்ப மிக்கதிரு யானைமுக
தண்கமல பாதமலர் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மூளாய் வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி முருகன் பாடல்கள்

வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு
வதிரன்புலோ கந்தனையே வேண்டிவந்து வணங்கு
வெற்றியெல்லாம் கிடைக்கும் வேண்டியது பலிக்கும்
வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு

ஏறுமயில் ஏறிவினை யாடிவந்தானே முருகன்
ஈசனுடன் ஞானமொழி பேசிவந்தானே
கூறும் அடியார்களுக்காய் வதிரன்புலோவில்
குன்றம்விட்டு இறங்கிவந்து அவனருள்வானே!
(வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு
வதிரன்புலோ கந்தனையே வேண்டிவந்து வணங்கு)

கூறுமடியார்கள் வினைதீர்க்க வந்தானே முருகன்
குன்றுருக வேல்வாங்கி நின்றிருந்தானே
மாறுபாடு இன்றிவந்து வதிரன்புலோவில்
வள்ளி தெய்வயானையுடன் வரமருள்வானே!
(வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு
வதிரன்புலோ கந்தனையே வேண்டிவந்து வணங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடு சூரனையும் வதைக்க வந்தானே முருகன்
வள்ளியை மணம்புரிய வந்தமர்ந்தானே
ஆறுமுகம் தேடுவோற்கு வதிரன்புலோவில்
ஆதிஅப்பன் பிள்ளையாகி அருள்புரிவானே

(வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு
வதிரன்புலோ கந்தனையே வேண்டிவந்து வணங்கு)

ஆறுமுகம் ஆனபொருள் உணர்த்தவந்தானே முருகன்
ஆதி அருணாசலமும் அமர்ந்திருந்தானே
நாதியற்று வருபவற்கு வதிரன்புலோவில்
பீதிபோக்கி அடைக்கலங்கள் அவனருள்வானே!.

வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு
வதிரன்புலோ கந்தனையே வேண்டிவந்து வணங்கு
வெற்றியெல்லாம் கிடைக்கும் வேண்டியது பலிக்கும்
வேலவனின் வேலைநம்பி வேலையெல்லாம் தொடங்கு

வதிரன் புலோநகர் வாரீர் – வந்து
கந்தன் கணபதியே பணிவீர்
தந்த முகன்வந்து கருணை புரிவான் – தமிழ்
கந்த முகன்வந்து காவல் இருப்பான்

வதிரன்புலோநகர் வாரீர்

வாழ்கின்ற போதிலே (சித்தி) வாழ்ந்து முடிக்கின்ற போதிலே(முத்தி)
நீழ்கின்ற துயரோட (பக்தி) நிலைத்திங்கு வாழ்ந்திட (புத்தி)
சித்தியும், முத்தியும், பக்தியும், புத்தியும்
தந்துமைத் தினக்காக்கும் தலம் மூளாய் அதனால்

(வதிரன் புலோநகர் வாரீர் – வந்து
கந்தன் கணபதியே பணிவீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைத்தருகின்ற (அருமை) கலைஞானம் அருள்கின்ற(பெருமை)
நல்வித்தை அருள்கின்ற (புதுமை) நாளெல்லாம் நமைக்காக்கும்(திறமை)
அருமையும், பெருமையும், புதுமையும், திறமையும்
தந்தும்மைத் தினங்காக்கும் தலம்மூளாய் அதனால்
(வதிரன் புலோநகர் வாரீர் – வந்து
கந்தன் கணபதியே பணிவீர்)

சஞ்சலம் நீக்கிடும் (தொகுதி) சந்தோசம் தவழ்ந்திடும்(பகுதி)
நெஞ்சுரம் தருகின்ற (தகுதி) நேரான வழிகாட்டும் (மிகுதி)
தொகுதியும், பகுதியும், தகுதியும், மிகுதியும்
தந்தும்மைத் தினங்காக்கும் தலம்மூளாய் அதனால்
(வதிரன் புலோநகர் வாரீர் – வந்து
கந்தன் கணபதியே பணிவீர்)

துன்பத்தைப் போக்கிடும்(நீறு) இன்பத்தை தந்திடும் (தீர்த்தம்)
தன்பக்கம் இழுக்கும்(சந்தனம்) எங்கும் மங்கலம் தவழும்(குங்குமம்)
திருநீறும், தீர்த்தமும், சந்னமும், குங்குமமும்
தந்தும்மைத் தினங்காக்கும் தலம்மூளாய் அதனால்
வதிரன் புலோநகர் வாரீர் – வந்து
கந்தன் கணபதியே பணிவீர்
தந்த முகன்வந்து கருணை புரிவான் – தமிழ்
கந்த முகன்வந்து காவல் இருப்பான்
வதிரன் புலோநகர் வாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ – மூளாய்
பதியேறித் துதிபாட அருளும்புலோ
(வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ)

மதிசூடி நிற்போபரின் மைந்தன்புலோ – அது
முதியோரை மகிழ்விக்கும் குமரன்புலோ
கதியென்று நிற்போரைக் காக்கும் புலோ – இது
அதிவீரன் முருகோனின் வதிரன்புலோ!
(வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ – மூளாய்
பதியேறித் துதிபாட அருளும்புலோ)

கலைஞானம் தவழ்கின்ற கந்தன்புலோ – இது
நிலையாக அடியற்காய் நிலைக்கும்புலோ
தலையாய உயர்மூளாய் தந்தபுலோ – இது
மலைமாறன் முருகோனின் வதிரன்புலோ!
(வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ – மூளாய்
பதியேறித் துதிபாட அருளும்புலோ)

முருகத் தமிழ்முழங்கும் அன்பர்புலோ – இது
மருவுதிரு செந்தூராய் மலரும்புலோ
உருகமனம் பெருகியருள் ஓடும்புலோ – இது
வருவோர்க்கு வாழ்வுதரும் வதிரன்புலோ!
(வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ – மூளாய்
பதியேறித் துதிபாட அருளும்புலோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்கு உபதேசம் செய்தபுலோ – இது
தொந்திக் கணபதியும் அமர்ந்தபுலோ
செந்தமிழ் தேனொழுகும் உயர்ந்தபுலோ – இது
விந்தைகள் பலநிறைந்த வதிரன்புலோ!

(வடிவேலன் குடிவாழும் வதிரன்புலோ – மூளாய்
பதியேறித் துதிபாட அருளும்புலோ
வடிவேலன் குடி)

உனக்கென்ன இல்லை இங்கு முருகா
ஊரூராய் மயிலேறி ஓடோடி அலைகின்றாய்
உனக்கென் இல்லையிங்கு

கடலுக்குள் படகோட்டி கரையேற இடமுண்டு
திடலுக்குள் தினைப்புலம் காக்கின்ற துணையுண்டு
வடமூளாய் மண்ணிலோர் வதிரன் புலோதன்னில்
திடமான கோயிலொடு பக்தரும் உனக்குண்டு.

உனக்கென்ன இல்லை இங்கு முருகா
ஊரூராய் மயிலேறி ஓடோடி அலைகின்றாய்
உனக்கென் இல்லையிங்கு

இசைபாடும் இளங்குயில்கள் உனக்கிங்கு பலஉண்டு
விசையோடு திசையாவும் பறந்தோடும் வேலுண்டு
திசையாவும் புகழ்பூத்த வதிரன் புலோதன்னில்
அசையாத கோயிலொடு பக்தரும் உனக்குண்டு.

உனக்கென்ன இல்லை இங்கு முருகா
ஊரூராய் மயிலேறி ஓடோடி அலைகின்றாய்
உனக்கென் இல்லையிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவில்யாளர் பாடகர்கள் களித்தாடும் கூட்டமுண்டு
தவிலோடு நாதஸ்வரம் ஒலிக்கின்ற கலைஞருண்டு
புவிமேவும் ஊரான வதிரன் புலோதன்னில்
குவிந்ததோர் கோயிலொடு பக்தரும் உனக்குண்டு

உனக்கென்ன இல்லை இங்கு முருகா
ஊரூராய் மயிலேறி ஓடோடி அலைகின்றாய்
உனக்கென் இல்லையிங்கு

சுட்டபழம் கொடுக்க சுந்தரத் தமிழருண்டு
சொட்டும் தமிழுரைக்க சோபித்த மாந்தருண்டு
கட்டழகு ஊரான வதிரன்புலோ தன்னில்
மட்டிலாக் கோயிலொடு மகத்தான பக்தருண்டு

உனக்கென்ன இல்லை இங்கு முருகா
ஊரூராய் மயிலேறி ஓடோடி அலைகின்றாய்
உனக்கென் இல்லையிங்கு

வடிவேலன் வடிவம் கண்டேன்
மூளாயூர் வதிரன் புலோவாசல் வந்ததுமே
வடிவேலன் வடிவம் கண்டேன்

நெற்றிக்கண் பொறியொன்று வந்திங்கு வீழ்ந்ததுவோ
வெற்றிவேலாயுதனின் வீடிங்கு எழுந்ததுவோ
சுற்றியோர் மயிலாடி சுகமாக உறங்கிடவே
பற்றிநான் போற்றுகின்ற மூளாயூர் பதிலந்த

வடிவேலன் வடிவம் கண்டேன்
மூளாயூர் வதிரன் புலோவாசல் வந்ததுமே
வடிவேலன் வடிவம் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரன் புலோவயல் வள்ளியார் காத்ததுவோ
புதிர்பூத்த பதியொன்று பூத்திங்கு மலர்ந்ததுவோ
கதிர்வேலன் களமாடி களைப்பாறி உறங்கிடவே
முதிர்ஞானப் பழத்தோனின் மூளாயூர்ப் பதியிலந்த
வடிவேலன் வடிவம் கண்டேன்
மூளாயூர் வதிரன் புலோவாசல் வந்ததுமே
வடிவேலன் வடிவம் கண்டேன்

நாவல்மரம் கந்தன் நாவுக்காய் மலர்ந்ததுவோ
சேவல் கொடியோசேர் கோயிலும் தெரிந்ததுவோ
தேவரும் முனிவர்களும் அமுதுண்டு உறங்கிடவே
ஆவலால் ஓடிவந்தேன் மூளாயூர்ப் பதியிலந்த
வடிவேலன் வடிவம் கண்டேன்
மூளாயூர் வதிரன் புலோவாசல் வந்ததுமே
வடிவேலன் வடிவம் கண்டேன்

முத்தமிழ் சத்தங்கள் மூளாயில் ஒலித்ததுவோ
நித்தமும் அவன்கோயில் நினைவுக்குள் பதிந்ததுவோ
எத்தனை இருந்தாலும் அவனடியில் உறங்கிடவே
சித்தமாய்ப் பாடிவந்தேன் மூளாயூர்ப் பதியிலந்த
வடிவேலன் வடிவம் கண்டேன்
மூளாயூர் வதிரன் புலோவாசல் வந்ததுமே
வடிவேலன் வடிவம் கண்டேன்

மூளாய் முருகனை முத்தான குமரனை
முன்வந்து தொழுவோற்கு நன்மைகள் உண்டு
வதிரன்புலோவானை வடிவான அழகோனை
வலம்வந்து தொழுவோற்கு வாழ்க்கை உண்டு
வலம்வந்து தொழுவோற்கு வாழ்க்கையுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கு ஆண்டு அவனிக்கு தோன்றியே
அசுரத்தை அழிப்பதால் நன்மைகள் உண்டு
நீண்டதொரு வேறுடன் நித்தமவன் இருப்பதால்
வதிரன்வரும் அடியாற்று வாழ்க்கையுண்டு
மூளாய் முருகனை முத்தான குமரனை
முன்வந்து தொழுவோற்கு நன்மைகள் உண்டு

வயலோரம் குளத்தோரம், வள்ளலவன் தோன்றியே
கயமையை அழிப்பதால் நன்மைகள் உண்டு
பயமுனக்கு ஏனென்று அபயமவன் அளிப்பதால்
வதிரன்வரும் அடியாற்று வாழ்க்கையுண்டு!
மூளாய் முருகனை முத்தான குமரனை
முன்வந்து தொழுவோற்கு நன்மைகள் உண்டு

வள்ளியொடு தெய்வானை வடிவேலவன் தோன்றியே
வெவ்வினைகள் களைவதால் நன்மைகள் உண்டு
புள்ளிமயில் ஏறியே துள்ளியவன் வருவதால்
வதிரன் வரும் அடியாற்கு வாழ்க்கையுண்டு!
மூளாய் முருகனை முத்தான குமரனை
முன்வந்து தொழுவோற்கு நன்மைகள் உண்டு

கந்தன்புகழ் பாடவே வந்துஅவன் தோன்றியே
வந்தபகை ஒழிப்பதால் நன்மைகள் உண்டு
சுந்தரனாய் மாறியவன் செந்தமிழே பேசுவதால்
வதிரன்வரும் அடியாற்கு வாழ்க்கையுண்டு!
மூளாயூர் முருகனை முத்தான குமரனை
முன்வந்து தொழுவோற்கு நன்மைகள் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரன்புலோவானை வடிவான அழகோனை
வலம்வந்து தொழுவோர்க்கு வாழ்க்கை உண்டு
வலம்வந்து தொழுவோர்க்கு வாழ்க்கை உண்டு

முருகன் புகழ் பாடவேண்டும்
மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்
கருவாக்கு உருவாக்கு எனையாள்சற் குருவான
முருகன் புகழ்பாட வேண்டும்
மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்

வதிரன் புலோவிலோர் கோயில் – அங்கு
உதிரும் தமிழ் அவன் அழகு
கதிவீசும் வயலோரம் கந்தனின் வீதி
முதிர்ஞானம் ஒன்றே அவனருளும் செல்வம்
முருகன் புகழ்பாட வேண்டும்
மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்

முத்தமிழ் முழங்கிடும் முத்தம் முத்தத்தில்
மத்தள ஒலிமுழங்கும் சத்தம்
எத்திசை கேட்டாலும் வாய்ப்பாட்டு வயலினிசை
மொத்தத்தில் மூளாயூர் முருகனூராகும்
முருகன் புகழ்பாட வேண்டும்
மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்

நாலூரும் நலங்காக்கும் இறைவன் – மூளாய்
ஆல்முன்னே அமர்ந்தாழும் தலைவன்
பால்கொண்டு பழம்கொண்டு பாடியே பரவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலேந்தி வினைதீர்ப்பான் மூளாயூர் முருகன்

முருகன் புகழ்பாட வேண்டும்

மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்

நாலூரும் நலங்காக்கும் இறைவன் – மூளாய்

ஆல்முன்னே அமர்ந்தாடும் தலைவன்

பால்கொண்டு பழம்கொண்டு பாடியே பரவிட

வேலேந்தி வினைதீர்ப்பான் மூளாயூர் முருகன்

முருகன் புகழ்பாட வேண்டும்

மூளாயூர் முருகன் புகழ்பாட வேண்டும்

மூளாயூர் முருகன்புகழ் பாடவேண்டும்

உனக்கென்ன வேலையுண்டு முருகா

ஊருக்குள் மூத்தோரை ஏமாற்றி விளையாடும்

உனக்கென்ன வேலையுண்டு

தந்தையை பொருள் கேட்க இரு என்று பணித்தாய்நீ

தாயாரை ஏமாற்றி ஆண்டியாய் அலைந்தாய் நீ

ஊர்விட்டு ஊர்மாறி உலகெல்லாம் பறந்தோடி

பார் போற்றும் மூளாயூர்க் குமரனாய் அமர்ந்தாய்நீ

உனக்கென்ன வேலையுண்டு முருகா

ஊருக்குள் மூத்தோரை ஏமாற்றி விளையாடும்

உனக்கென்ன வேலையுண்டு

பழத்திற்காய் கிழவியாரை பாடென்று பணித்தாய்நீ

களத்திலே சூரனையும் தளம்விட்டு அழித்தாய்நீ

குளத்திலே பொறியாகி குழந்தைகள் ஆறாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழத்தொழ மூளாயூர்க் குமரனாய் அமர்ந்தாய் நீ
உனக்கென்ன வேலையுண்டு முருகா
ஊருக்குள் மூத்தோரை ஏமாற்றி விளையாடும்
உனக்கென்ன வேலையுண்டு

வள்ளியை மணம்புணர வடிவங்கள் எடுத்தாய்நீ
துள்ளிய மான்பிடிப்போன் போலவே துவண்டாய்நீ
கள்ளமிலாத அண்ணன் கருணையைப் பெறுவதற்காய்
தெள்ளுதமிழ் மூளாய்க் குமரனாய் அமர்ந்தாய் நீ
உனக்கென்ன வேலையுண்டு முருகா
ஊருக்குள் மூத்தோரை ஏமாற்றி விளையாடும்
உனக்கென்ன வேலையுண்டு

முத்தமிழ் விளைநிலமாய் மூளாயை வளர்த்தாய்நீ
மெத்தவே உயர்ந்த பல வித்தகம் தந்தாய்நீ
தித்திக்கும் தமிழாலே தினமெனைப் பாடுமென்றோ
புத்திக்குள் புகுந்துமூளாய்க் குமரனாய் அமர்ந்தாய்நீ
உனக்கென்ன வேலையுண்டு முருகா
ஊருக்குள் மூத்தோரை ஏமாற்றி விளையாடும்
உனக்கென்ன வேலையுண்டு

வடிவேலன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் வடிவேலன் புகழ்பாடுவோம்
மூளாயூர் முருகேசன் முத்தான அழகேசன்
வடிவேலன் புகழ் பாடுவோம்

நெற்புலக் கரையோரம் பொற்பாதம் பதித்தவன்
அற்புதக் கலைஞர்க்கு கலைஞானம் கொடுத்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகவல்லியின் கைகளில் தவழ்ந்தவன்
மூளாயூர் வதிரன் புலோதன்னில் அமர்ந்தவன்
(வடிவேலன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் வடிவேலன் புகழ்பாடுவோம்)

நாவல் மரம்தேடி நம்மூரை அடைந்தவன்
பாவலர் பலர்பாட பழம்பல கொடுத்தவன்
சேவல் கொடியோடு செவ்வானம் அளந்தவன்
மூளாயூர் வதிரன் புலோதன்னில் அமர்ந்தவன்
(வடிவேலன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் வடிவேலன் புகழ்பாடுவோம்)

மாங்கனி பிரித்திட ஆண்டியாய் போனவன்
ஓங்கிய சூரனின் கொடுமையை அழித்தவன்
ஈங்குதன் அண்ணனின் கரம்பற்றி இணைந்தவன்
மூளாயூர் வதிரன் புலோதன்னில் அமர்ந்தவன்
(வடிவேலன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் வடிவேலன் புகழ்பாடுவோம்)

மூளாய் என்றுஅருள் மூட்டியே வைத்தவன்
நாளாக மையெல்லாம் காத்தருள் புரிபவன்
தோளாகி அண்ணனார் துணையோடு இருப்பவன்
மூளாயூர் வதிரன் புலோதன்னில் அமர்ந்தவன்
வடிவேலன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் வடிவேலன் புகழ்பாடுவோம்
மூளாயூர் முருகேசன் முத்தான அழகேசன்
வடிவேலன் புகழ் பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி திருவூஞ்சல்

## காப்பு

சீரேறு மூளாய் கன்னகர மோங்குஞ்
சிவமேறு வரதபுரச் சேந்தர் நீபத்
தாரேறு புயசயிலடியர் பங்கர்
தவமேறுஞ் சீர்முத்துக் குமாரசாமி
நீரேறு திருவூஞ்சற்றமிழ் நிகழ்த்த
நிலவேறு மொரு மருப்பர் நிமலஞானக்
காரேறு திருமேனிச் சித்தி வேழங்
கவினேறுங் கமல பதங் காப்பதாமே. 1

## ஊஞ்சல் வர்ணம்

தன்னிகரினாதி சக்தி தம்பமாகத்
தழை பெரிய குடிலை மனுவிட்டமாக
முன்னுகலை யழகொழுகு கயிறதாக
மொழி மந்த்ர சக்தி வகை பீடமாக
நன்னயமார் பிரவு சத்தியணிகளாக
நண்ணு திருவூஞ்சறனில் வாஞ்சையாகப்
பொன்னில குலவரதபுர வாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலு வர்ணம்

அகர வென்றிசை யடியர் துள்ளியார்ப்ப
அண்டர் சொரிமலர் மாரியவளி தூர்ப்பக்
கரகமலமெதி ரேந்தி முனிவ ரார்ப்பக்
காகளமே யாதி யனகனைந்து சீர்ப்ப
வரகருணை யுமையம்மை யருளிற் பார்ப்ப
மைந்த வெனப் பரமசிவன் மகிழ்ந்து காப்பப்
புரவரத வரதபுர வாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல் 3

## சம்பிரம வர்ணம்

பொருவரிய கதிர் மதியங் கவிதை பற்றி
பொலிவாயு வாலவட்டம் புனைந்து சுற்ற
திருவளருஞ் சாந்தாற்றி வருணன் றெற்றக்
தீவர்த்தி யனவேந்தச் செறியுங் கொற்ற
வரமறலி நிருதி யுடைகை வாழ்கஏற்ற
மனுமந்த்ர வேருயிசை வளர்ந்தே யுற்ற
புகுமுதலாம் வரதபுர வாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல் 4

## சபா வர்ணம்

இருக்கு முதல் வேதங்க ளெங்கு மோங்க
இருடியர் கடுதி முறைகளிசைந்து தேங்க
தருக்கினாடு நூல்வல்லோர் நிற்பப் பாங்கர்
சதுர் மறையோன் முதலானோர் பூசைதாங்க
விருப்ப முடனடியவர்கள் விளைந்து தூங்க
வீரவாகாதியர்கள் மருங்கு வீங்க
பொருப்பமரும் வாதபுர வாடீருஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொரூப வர்ணம்

திருமருவு மோராறு வதன மின்னச்
சிங்கார விழிக்கருணை திகழ்ந்து துள்ள
உருமருவும் புயநிரைகள் படைகள் மன்ன
உபயபதமுபவீத முதல முன்றும்
கருதுநம திருவினைளொருங் பின்னங்
காணும் வகை மயிலாடக் கதிசம்பன்ன
பொருவரிய வரதபுர வாடீஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீஞ்சல் 6

## வாத்திய வர்ணம்

சத்தமுறு தவில் பம்பை தக்கை தாளம்
தரணிபுகழ் நாகசுரங் கொம்பு வேணு
சித்தமுறு குடமுளவு திமிலை பீலி
செப்பரிய பணமொடு உறுமிதித்தி
சுத்தமுறு மல்லரியே மருசு சங்கந்
துடிகடலின் முழக்கமெனத் துளங்கி யார்ப்ப
புத்தியுறு வரதபுர வாடீஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீஞ்சல் 7

## ஆலய வர்ணம்

வடிவமரும் துவநிற நிலம் விளக்கி
மகிழ் கனகச் சுவரியற்றி மணிகளாலே
படிவமுறு விட்டரங்கள் பயிற்சி மேலும்
பண்புநிறை மாகதத்தால் மகுடமாற்றித்
துடிபதும வாசனமுந் துலங்க வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய் தெற்கு ஹரிஹர புத்தி ஐயப்பன், ஐயனார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லரிய வாலயத்திற் சுரர்கள் மேனிப்
புடைபரவு வரதபர வாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல். 8

## நகர வர்ணம்

செங்காவி முகை விரித்து வாசம் வீசத்
தேமாவிற் குயிலோசை திகழ்ந்து பேசக்
கொங்காருஞ் சிறு தென்ற லசைந்து பேசக்
குலை சாய்த்து நெல் வணங்கக் குளிருந்தேச
சிங்கார முழாயாம் புர விஸ்வாச
செய்சூர சங்காரகுற மின்னேச
பொங்காதி வரதபுர வாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குக வாடீரூஞ்சல் 9

## வாழி

மிக்க திருவைதிக வான் சைவம் வாழி
மேதினியோர் புகழ் மூளாய் நகரம் வாழி
தக்கநிதி வரதபுர நகரம் வாழி
தகுசித்தி விநாயகனார் கருணை வாழி
மிக்க முத்துக்குமார குகன் கருணை வாழி
விழையமுதத் திருவூஞ்சல் மிகவும் வாழி
தொக்க திருத்தொண்டர் சிவதருமம் வாழி
தொல்லுலகமும் மாரி சொரிந்து வாழி. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் தென் ஹறிஹற புத்திர ஐயப்பன் பாடல்கள்

ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்
அரிகர புத்திரன் தென்மூளாய் ஐயப்பன்
ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்

பொங்கும் கடல்தன்னை அம்பெய்து அழித்தவன்
மங்கும் கடலாக்கி மக்களைக் காத்தவன்
சங்கூடும் கடலோர ஊர்தனில் வாழ்பவன்
தென்மூளாய்த் தலத்தென்றும் தெய்வீகமானவன்
(ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்)

உழவுக்கும் தொழிலுக்கும் உறுதுணையானவன்
கிழவனாய் வந்தெங்கள் வயல்களில் மகிழ்பவன்
தளராத மனந்தந்து உளமாற வைப்பவன்
தென்மூளாய்த் தலத்தென்றும் தெய்வீகமானவன்
(ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலோரம் படகிற்கு கலங்கரை யானவன்
நடமாடி ஆலடிப் பிட்டுண்டு மகிழ்பவன்
திடமாக நம்பிட உடன்நின்று காப்பவன்
தென்மூளாய்த் தலத்தென்றும் தெய்வீகமானவன்

(ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்)

ஐயப்பன் என்றிட அச்சங்கள் களைபவன்
மெய்யப்பன் என்றிட மேதினி காப்பவன்
செய்யப்பன் என்றிட கேட்டது செய்பவன்
தென்மூளாய் தலத்தென்றும் தெய்வீகமானவன்

ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்
அரிகர புத்திரன் தென்மூளாய் ஐயப்பன்
ஐயப்பன் புகழ் பாடுவோம்
ஓ ஓ ஓம் ஐயப்பன் புகழ் பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் கிழக்கு பொற்புலம்பதி
## மகா காளியம்பாள்

பொற்புலம் பதியாளே தாயே
தாயே அற்புதம் அனைத்தையும் அருள்பவள் நீயே
பொற்புலம் பதியாளே தாயே!

மூளாயூர் கிழக்காலே முந்தியே அமர்ந்தவளே
தாழாமல் அடியாற்கு தாயாகி இருப்பவளே
வாழாமல் இருப்போற்கும் வாழ்வருளும் நாயகியே
தூழாக்கி துயரோட்டும் மகாபத்திரகாளித்தாயே
பொற்புலம் பதியாளே தாயே
தாயே அற்புதம் அனைத்தையும் அருள்பவள் நீயே!

குங்குமம் நீர்விழூளாய் வருவோரை அழைப்பவளே
தங்கிடும் வேளையவர் அங்கங்கள் காப்பவளே
சிங்கத்தின் மேலமர்ந்த சிங்கார நாயகியே
மங்காத பொற்புலத்து மகாபத்திரகாளித்தாயே
பொற்புலம் பதியாளே தாயே
தாயே அற்புதம் அனைத்தையும் அருள்பவள் நீயே!

நெற்புலம் உழுவதற்கு ஏர் ஆக்கிக் கொடுத்தவளே
அற்புதத்தால் மகனை வதிரன்புலம் மீட்டவளே
சொற்பன சுந்தரியே சொக்கனின் நாயகியே
பொற்புலம் பதியயாளே மகாபத்திர காளித்தாயே
பொற்புலம் பதியாளே தாயே
தாயே அற்புதம் அனைத்தையும் அருள்பவள் நீயே!

மாடி மனைகட்டி மகிழ்ந்திட அருள்பவளே
கூட கோபுரத்தில் குடிபுக அருள்பவளே
தேடிய செல்வமே எம் தேவனின் நாயகியே
ஆடிய பாதத்தாளே மகாபத்திர காளித்தாயே
பொற்புலம் பதியாளே தாயே
தாயே அற்புதம் அனைத்தையும் அருள்பவள் நீயே!
பொற்புலம் பதியாளே தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கொற்றவன்குடி
**உமாபதி தேவ நாயனார்**
**அருளிச் செய்த**

# கொடிக்கவி

## உயிரின் குறிக்கோள்

1. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேவிடில் ஒன்(று)
ஒளிக்கும், எனினும் இருள் அடராது உள் உயிர்க்கும் உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துளது எனும் திரிமலத்தெ
குளிக்கும் உயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

### கருத்துரை

ஆணவத்திற்கும் ஞானத்திற்கும் இடம் ஒன்றாயிருந்தும் தனது காரணங் கெடாமலிருக்கிற மலத்தை தீக்கைமுறைமையினாலே போக்கி முத்தியை அடையச் செய்தலே முறை.

## அருளாளர் அருளும் முறைமை

2. பொருளாம் பொருளேது போதேது கண்ணே (து)
இருளாம் வெளியே (து) இரவே (து) - அருளாளா
நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

### கருத்துரை

கர்த்தா, சக்தி, ஆன்மா, கேவலநிலை, சகலநிலை, இவை இன்னவை எனத் தேவரீரை யல்லாமல் சொல்லுவார் வேறு எவருமிலர் என்று கொடி கட்டினோம். அதாவது சீவனானது திரோதம் - சுத்தமாயை அசுத்தமாயை - ஆணவம் கன்மம் இவ்வைந்தின் காரியக் கட்டுக்களின் நின்று விடுபடுவதிற்றே கொடிகட்டி நிற்க வேண்டும் என்பது புலனாகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருணை வேண்டுதல்

3. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா உணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி.

### கருத்துரை

மனம் - வாக்கு - காயங்களினாலே ஒருபோதும் இறைவன் எட்டப்படா தவன் எனினும் என்றும் பிரிவிலன் அத்தகையோனின் அருளைப் பெறத் தக்கதாகக் கொடி கட்டினேன் இதனால் கொடியேற்றம் அருள்பெறும் குறிப்புடையாதாம்.

## ஐந்தெழுத்துத் தியானம்

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் வேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.

### கருத்துரை

ஆன்மா பொதுப்பட முதற்கண் செய்ய வேண்டுவது தனக்குதவாத பாசத்தை நீக்குதல். அடுத்தது திருவருளுக்கு ஆளாவதாதல் முடிவாகச் சிவத்துள் அழுந்தப் பெறுவது ஆம் இதற்கு சிவாயநம என்ற ஐந்து எழுத்தும் ஓம் - ஆம் - அவ் - சிவாயநம என்கிற எட்டெழுத்தும் ஓம் நமசிவவாய என்ற ஆறெழுத்தும் ஓம் சிவய என்கிற நாலெழுத்துமாக ஆக இப்படி உச்சரிக்கிற விதிப்படியே உச்சரித்து விதிப்படி உச்சரிக்கிற முறைமையை விட்டுப் பின்னர் ஐந்தெழுத்தினுடைய சொரூபத்தை அறிந்து வகரமாகிய பராசத்தியையும் சிகாரம் ஆகிய சிவத்தையும் தன்னுடைய இருதயத்திலே இருத்தில் பேசும் எழுத்தாகிய வகாரம் ஆகிய சத்தி பேசா எழுத்தாகிய சிகாரம் ஆகிய சிவத்தை இரண்டறக் கூசாமல் அழுத்துவிக்கக் கொடி கட்டினேன் என்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூளாய் கிழக்கு பொற்புலம் பதி மகா காளியம்பாள் ஆலயமும்
வைரவர் ஆலயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் விருத்தம்

சீரேறு திங்களணி செஞ்சடையுமுக்கணுந்
திரிசூலகமருகச்சீர் செஞ்சோதிபயில் மேனி
வச்சிர தெண்டம பாசத்திசை முகன்சிகரபாலங்
காரேறுகபாமுந்தொடண்டரி தயாம்புயம் கவினுறும்
பாத குறடுங்கடலுலகுகிடுகிடெனநட
னமிடுவேதமாங்க வினேறு மூர்த்தியழகும்
பாரேறுபல்லுயிர்க்கருணைமொழிமுகவசன பரிவுநால்
காணமேவிப்பத்திமிகு சித்தியொளிர்புத்தி
மெத்திவ வாழ்வுபாக்கியசிலாக்யமருள்வாய்
வாரேறுவயலேறு போரேறமீறுதிருவரதன் புரத்து
சிமலாவழரிதளிசொலிசடில காலவைரவதேவ
வரதவடுகேசநமவே.

அண்டரொடுமிண்டுவும் மண்டலத்தவர்களும்
அம்புயனுமுலகினோரும்
அரியமந்திரகற்பதந்திரமகாயோக
அட்டமாசித்திதேருங்
தொண்டருங்கண்டரியவெண்டகையரின் பாத
சோதிநாங்காண்பதெப்போ (யுரைக்கவு)
தொல்லைவினையில்லையென நல்லவை
சுத்தனாய்வாழ்வதெப்போ
பண்டிருண்டிடுகண்டர் முண்டக முகந்தனிற்
பாலனாய் வந்தகுமரா
பந்துமுலைவிந்தையருள் சுநதரசித்தாகாச
பகர்வரதநற்புரத்து
வண்டமிழ்த்தொடை கொண்டு கண்டவர்க்கருளன்பு
மல்குகாருண்யமிமலா
வளரிதழிபொலி சடிலகாலவைரவதேவ
வரதவடுகேசநமவே.

ஓம் பைரவாய நம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோவில்களுடன் இந்து சமூதாயத்தின் உறவுகளும்

முன்னாளில் கோவில்கள் இந்துக்களின் சமுதாய வாழ்வோடு இரண்டறப் பிணைந்திருந்தன. எந்த ஒரு காரியமும் கோவிலில் பூசாரியும் கோவில் தர்மகர்த்தாவும் சம்பந்தப்படாமல் ஊரில் நடப்பதில்லை.

தனிநபர் சம்பந்தப்பட்ட கல்யாணம், மரணம் போன்றவையானாலும் பொதுக் காரியமானாலும் வழக்கு நியாயத் தீர்ப்பு போன்றவையானாலும் கோவிலை மையமாக வைத்தே நடந்தன.

எல்லாக் கலைகளையும் மாணவர்கள் கற்பதும் கோவிலிலேயே நடந்தது. நாடகம், நடனம், இசை விருந்துகள், மருத்துவம், இலக்கிய விவாதங்கள், தத்துவ ஆராய்ச்சிகள், காவிய அரங்கேற்றங்கள், வேள்விகள் முதலியனவும் கோவிலியே நடந்தன.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் கோவிலில் நடக்கும்போது இறைவனின் வழிபாட்டுடனேயே நடந்தன. இந்து சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு சடங்கிலும் கோவிலும் இறைவழிபாடு பின்னிக் கிடந்ததால் இந்து ஒவ்வொருவருனும் இந்து சமயம் என்னும் பரந்துவிரிந்த பெரும் ஆலமரத்தின் நிழலிலேயே வாழ்ந்திருந்தான்.

கோவில் ஊராரின் பொது இடம். அனைவருக்கும் உரிமைப்பட்ட இடம். அதனால் கோவிலில் நடக்கும் நிகழ்ச்சிகளும் அனைவரும் பங்குபெறும் பொது நிகழ்ச்சியாகவே நடந்தது.

இப்படி ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஊர்மக்கள் அனைவரும் பங்குபெறும்போது இந்துக்களிடையே உருவான ஆழ்ந்த பிணைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும் ஒற்றுமையும் அவரக்ளது சக்தியையும் அறிவையும் வலுப்படுத்துகின்றன.

ஒவ்வொரு சிற்றூரிலும் தனித்தனியே கோவிலை மையமாக வைத்து வாழ்ந்த இந்துக்கள் வருடத்தில் ஓரிரு தடவைகள் பெரிய கோவில் திருவிழாக்களை மையமாக வைத்து லட்சணக்கணக்கில் மக்கள் ஒன்றாகத் திரண்டனர். மிகப்பெரிய தேர்களை உருவாக்கி அனைத்து இந்துக்களும் கூட்டமாகச் சேர்ந்த இழுத்து இறைபக்தியையும் ஒற்றுமையையும் புதுப்பித்துக் கொண்டனர். இப்படி ஒரு வட்டாரத்தல் உள்ள பல சிற்றூர் மக்கள் தேர்த்திருவிழாக்களில் ஒன்றாகக் கலக்கமுடிந்தது. பாரதக்கண்டத்திலும் இமயமலை முதல் கன்னியாகுமாரி வரையிலும் இந்துக்களின் கலாச்சாரம் செழிக்கவும் பரஸ்பர பாச உணர்வும் ஒற்றுமையும் வளரவும் கோவில் வழிபாடுகளே மையமாக அமைந்தன.

காஷ்மீரத்து இந்துக்கள் கால்நடையாக கன்னியாகுமரிக்கும் ராமேஸ்வரக்கும் காசிக்கும் வந்தனர். கன்னியாகுமரி இந்துக்களும் அதேபோல கால்நடையாகவே கைலாயம் வரை சென்றனர்.

பல மாதங்களும் வருடங்களும் பிரயாணத்தில் செலவு செய்த இந்துக்கள் பாரதம் முழுவதிலும் ஒரே மாதிரியான இந்து சமய நெறியைப் பரப்பிச் சீர்படுத்தினர்.

ஆன்மநேய ஒருமைப்பாடும், விருந்தோம்பலும் பண்பும் பாசமும் இதனால் இந்துக்களிடையே வளர்ந்தோங்கி இருந்தன. மகா காவியங்களான இராமாயணமும், கம்பராமாணம், மகாபாரதமும், கோவில்களில் படித்துப் பொருள் சொல்லப்பட்டன.

இதனால் இளம் உள்ளங்களில் பெற்றோரைப் பற்றிய பாசமும் சகோதர பாசமும் வீரமும் இறை உணர்வும் விதைக்கப்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலில் பூசை செய்யும் பூசாரி ஒழுக்கத்தின் சின்னமாகவும் மேன் மகனாகவும் வேதங்களை அறிந்தவனாகவும் இந்துக்களுக்கு அறிவு சொல்லும் ஆசானாகவும் இருந்தார்.

கோவில் பூசாரிக்கும் ஊர்மக்களுக்கும் இருந்த இறுக்கமான பிணைப்பால் கோவிலின்போல் இருந்த பக்தி மக்களுக்கு மேலும் வளர்ந்தது. கோவில் தர்மகர்த்தாகவும், பரிபாலன சபையும் அதுபோலவே மேன் மகனாகவும், திறமை வாய்ந்தவனாகவும் இருந்தார்கள். இதனால் நாத்திகர்களும் இறைவழிபாட்டைக் கிண்டல் செய்யும் பேர்வழிகளும் இல்லாதிருந்தனர்.

கோவிலில் ஒருநாளில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இறைவனுக்குத் தீப ஆராதனையும் வழிபாடும் நடந்தன. இறைவனுக்கு அலங்காரம் செய்து திறக்கப்படும் வரை அனைத்து பக்தர்களும் அங்கே கூடியிருந்து தங்களுக்குள் அமைதியாக அளவளாவி பஜனை செய்து உபன்னியாசம் கேட்டு நேரத்தைச் செலவழித்தனர்.

அலங்கார பூஜையின்போது எல்லோரும் ஒரே நேரத்தில் கூட்டமாக சுவாமி தரிசனம் செய்தனர். இப்படி ஒரேநேர சுவாமி தரிசனம் மட்டும் இருந்தால் இந்துக்கள் அந்த நேரத்தில் கட்டாயமாக ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பழகி ஒருவர் மற்றவரை அதிகம் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது.

இந்நாளில் –

ஆனால் இந்நாளில் இந்துக்களின் முந்தைய நடைமுறைகள் மாற்றப்பட்டுவிட்டன. இந்து சமுதாயத்தின் ஒற்றுமையைக் குலைத்து பாரதத்தின் சக்தியை மழுங்கடிக்கும் திட்டத்தைத் தீட்டிய ஆங்கிலேயக் கிறிஸ்தவர்கள் மிக புத்திசாலித்தனமாகச் செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களையும் அவரக்ளது கோவிலையும்தனித்தனியாகப் பிரித்தனர். கோவில் வேறு, சமுதாயம் வேறு என்னும் சிந்தனையை சிறுகச்சிறுக ஊட்டினர்.

இதனால் இன்று இந்துக் கோவில்கள் இந்துக்களின் கையில் இல்லை. அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. அரசியல்வாதிகளாகவும் நாத்திகர்களாகவும் பணப்பேய் பிடித்து அலைபவர்களாகவும் இருப்பவர்கள் கூட கோவில் தர்மகர்த்தா ஆகிவிடுகிறார்கள். தர்ககர்த்தாவுக்கு கோவில் விவகாரமும் தெரியாது, சமுதாய விவகாரமும் தெரியாது. இன்றைய தர்மகர்த்தாக்களே இந்து சமுதாயத்தை இந்துவின் கோவில்களிலிருந்து தூரத்தூர விலகிப்போகும்படி செய்துகொண்டிருக்கிறார்கள்.

கோவில் பூசாரிக்கும் கும்பிட வருகிறவனுக்கும் தொடர்பே இல்லை. பக்தர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு அவர்களது சமுதாய வாழ்வில் முன்னின்று உதவி செய்து எல்லோருக்கும் நல்லோனாக இருந்த முன்னாளைய பூசாரி பின்னாளில் கோவிலை விட்டு வெளியே வராதனாகவும் பிறர் கைபட்டால் தீட்டு பட்டுவிடும் என்று ஒதுங்கி ஓடுகிறவனாகவும் ஆனான்.

பக்தனிடம் அன்புடன் பழகி ஆறுதலும் அறிவும் சொல்லவேண்டிய பூசாரி, பக்தன் கையிலிருக்கும் அர்ச்சனைத் தட்டை மட்டுமே – அதிலிருககும் தட்சணையை மட்டுமே பார்க்கும் சுயநலக்காரனாக ஆனான் அல்லது ஆக்கப்பட்டான்.

பூசாரி இந்து சமுதாயத்துடனுள்ள தொடர்பை ஜாதியின் பெயராலும் ஆச்சாரத்தின் பெயராலும் அறுத்துக்கொண்ட நாள் முதல் இந்துக்களின் பலம் குன்ற ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட ஆலயத்தினைத் திறந்து எல்லோரும் கூட்டு வழிபாடு நடாத்தும் நிலை மாறி, எந்த நேரத்தில் யார் வந்தாலும் அர்ச்சனை செய்யவும், வழிபாடு என்ற பெயரால் ஏதோ செய்யவும் வாய்ப்பு ஏற்பட்டது.

பக்தன் பத்துக் காசை தட்டில் போட்டவுடன் பூசாரி சூடம் காண்பித்துவிடுவதால் வந்தனுடைய வழிபாடு பத்து நிமிடத்தில் முடிந்துவிடுகிறது.

இதனால்கோவிலுக்கு வருகிறபக்தனுக்கு கோவிலைப் பற்றியோ, கோவிலுக்கு வரும் மற்ற பக்தர்களைப் பற்றியோ, இந்து சமுதாயத்தைப் பற்றியோ எந்த சிந்தனையும் செய்ய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

தன்னுடைய சுயநன்மைக்காக, குடும்ப நன்மைக்காக பிரார்த்தனை செய்து, பலனடைவதே பக்தி என்று நம்பத் தொடங்கினர் மக்கள். கோவிலில் ஒன்றாகக் கூடுவதும், சேர்ந்து இருப்பதும் போன்ற சந்தர்ப்பங்கள் இல்லாமல் போய்விட்டன. உண்மை பக்தி என்பதை விளக்குபவர்கள் இல்லாமற்போனது.

தர்மகர்த்தா தரம்கெட்டுப் போனதால் ஊர் வழக்குகள் கோவிலில் தீர்க்கப்படுவதில்லை. இதனால் இளைஞர்கள் பெரியோர் சொல் கேட்பதில்லை. நகைகள் சில பக்தர்கள் அபரிதமான பக்தியால் தங்க நகைகளையும், விலை உயர்ந்த பொருட்களையும் சுவாமிக்கு அலங்காரம் செய்வதற்காக கோவிலுக்குக் கொடுக்கிறார்கள்.

இவர்கள் இப்படிக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் கொடுத்தது மட்டுமல்ல ஒவ்வொருமுறையும் சுவாமிக்குப் போட்டு அலங்காரம் செய்ய வற்புறுத்துகிறார்கள். கோவிலில் நகைகள் சேரும்போது திருட்டுப் போவதற்கும் கோவில் பூசாரி நிர்வாகிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசைப்பாட்டு கள்ளக்கணக்கு எழுதுவதற்கும் இந்த விலையுயர்ந்த நகைகள் ஏதுவாகின்றன.

இப்படி நகைகள் ஒரு கோவிலில் இருப்பதையே கருத்தாகக் கொண்டு நாஸ்திகர்களுகம் கூட கோவில் விவகாரங்களில் தலையிட ஆரம்பிக்கிறார்கள். கோவிலுக்கு காணிக்கையாக வரும் பொருட்கள் கோவில் பக்தர்கள் நன்மைக்காகவும் இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகவும் மட்டுமே பயன்படவேண்டும்.

மாறாக பெரும் செல்வத்தை நம் கோவிலில் சேர்த்து வைத்தால் முகமதியர் கொள்ளையடித்ததைப்போல இப்போது நாஸ்திகர்கள் கொள்ளையடிப்பதிலேயே தான் போய்விடும்.

இனிமேல் –

நாம் கோவிலுக்குப் பணம் சேர்ப்பதைவிட பக்தர்களையும் உண்மையான இந்துக்களையும் சேர்க்கவேண்டியது மிக மிக அவசியம். சிறிய கோவிலாக இருப்பினும் அங்கே வழிபாடு செய்யும் பக்தர்கள் சேர்ந்திருந்து பிரார்த்தனை செய்வதற்கும் சமயக் கருத்துக்களைக் குறித்து உபன்னியாசங்கள் கேட்பதற்கும் சமய வகுப்பு, திருவிளக்கு வழிபாடு செய்வதற்குமாக ஒரு மண்டபம் கண்டிப்பாகத் தேவை. அதை விட்டுவிட்டு ஆடம்பரமாக கூட கோபுரங்களைக் கட்டி ஆனால் ஆட்கள் உட்கார இடமில்லாமல் கோவில் அமைப்பது தவிர்க்கப்படவேண்டும்.

வழிபாடு செய்யும்போது பூசாரி சொல்லும் மந்திரங்களைக் கூறவேண்டும். இதற்காக ஆலய நிர்வாகிகள், ஊர்மக்கள் சமஸ்கிருத, தமிழ் மந்திரங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளைத் தெளிவாகக் கற்க ஆவன செய்யவேண்டும். அத்துடன் வாரம் ஒரு நாள் சமய வகுப்பு வாரம், ஒருநாள் சத்சங்கம், மாதம் ஒருநாள் திருவிளக்கு வழிபாடு ஆகியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற ஏற்பாடு செய்யவேண்டியது ஆலய நிர்வாகிகளின் தலையாய கடமையாகும்.

விழாக்கள் நடாத்தும்போது ஊருக்கு ஊர் யார் அதிகமாக ஆடம்பரச் செலவு செய்வது என போட்டிபோட்டு மக்களின் பணம் விரயமாக்குவது கூடவேகூடாது. இது மகாபாவம். விழாக்களில் ஆன்மீகத்தை ஊட்டாத வளர்க்காத எந்த நிகழ்ச்சியையும் நடத்தலாகாது. அவ்வாறு நடத்தினர் நிர்வாகிகளும் ஊர்மக்களும் தெய்வ கோபத்திற்கு ஆளாகி இன்னல்படவேண்டிவரும்.

ஆலயங்களில் அதனைச் சுற்றியிருக்கும் அனைத்து மக்களின் முழுவிபரப் பதிவேடு பேணப்படவேண்டும். பிறப்பு, திருமணம், மரணம் இவற்றிற்கான தனித்தனி பதிவேடு பேணப்படவேண்டும்.

மேலும் ஊரில் யாருக்கேனும் நல்லது கெட்டது நடந்தால் அங்கு சென்று அவர்கள் வளமுடனும் அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ பிரார்த்திப்பதற்கு ஒரு பிரார்த்தனைக்குழு ஏற்பாடு செய்யவேண்டும்.

பணம் இல்லை என்ற காரணத்தால் ஊரில் ஒருவரேனும் கல்வி கற்கச் செல்லாமலோ திருமணம் ஆகாமலோ உணவின்றியோ இருக்காகாது. அவ்வாறு வசதியற்றவர்களுக்கு ஆலய விழாக்களுக்காக வசூலிக்கும் பணத்தை முழுவதும் விரயம் செய்யாமல் குறிப்பிட்ட சதவீதம் நிரந்தர சேமிப்பில் வைத்து அதன் வட்டிமூலம் கல்வி, மருத்துவம், திருணம் போன்ற உதவிகள் செய்யமுடியும்.

ஆலயங்களில் அந்தந்த ஊரைச் சார்ந்த பக்தியும் சிரத்தையும் உடைய ஒருவரே பூஜை முறையைக் கற்று பூஜை செய்யவேண்டும். பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதை ஒரு வருமானம் செய்யும் தொழில் எனவோ பரம்பரைத் தொழில் எனவோ ஆக்கக்டாது.

கோவிலில் பூஜை என்பது வெறுமனே தீபாராதனை காண்பது என்பதாக இல்லாமல் தினசரி ஊரார் அனைவரும் மாலையில் கூடி பூஜையை கீழ்வருமாறு அமைத்துக்கொள்ள வேண்டும்.

பஜனை, நன்மொழி வழங்கல், ஒற்றுமை கீதம், கூட்டுப் பிரார்த்தனை, தியானம், நாபஜெபம், தீராபாராதனை, கற்பூர ஆரத்தி, கூட்டாகத் துதிப்பாடல்கள் பாடுதல், நமஸ்காரம் செய்தல், பிரசாதம் பெறுதல்.

இவ்வாறாக ஆலயங்கள் இருந்தால் நாம் சிறந்த இந்துவாக மாறி பாரதத்தை பாரின் குருவாகக் காண இயலும்.

(சுவாமி ஸ்ரீ மதுரானந்த மகராஜ் அவர்களால் தொகுத்து கன்னியாகுமரி வெள்ளிமலை ஸ்ரீ ஹிந்து தர்ம வித்யாபீடம் வெளியிட்ட இந்து சமயம் முதுநிலை என்ற நூலிலிருந்த தற்போதைய தலைவர் ஸ்ரீ சைதன்யானந்த மகராஜ் அவர்களுடைய அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமயமாக்கலில் ஆலயங்களின் பங்கு

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"! என்ற முதுமொழிக்கேற்ப யாழ். குடாநாட்டிலே சைவ ஆலயங்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளன. ஒரு சைவ ஆலயம் தன்னும் இல்லாத ஒரு கிராமத்தை இன்று காணமுடியாது. மக்கள் கடவுள் மீது வைத்துள்ள அதீத நம்பிக்கையின் வெளிப்பாடு தான் இவ்வாலயங்கள் தோன்றக் காரணமாக இருந்து வந்தள்ளது. ஆரம்பத்தில் சிறிய சிறிய ஆலயங்களாக இருந்தவை எல்லாம் இப்பொழுது சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய அழகிய ஆலயங்களாகக் காட்சி தருகின்றன. மக்கள் தாம் நல்லபடி வாழவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இந்தப் பணிகளைச் செய்வதிலும் தவறு இல்லை. ஆயினும் இவ்வாலயங்களை நிர்வகித்துவரும் பரிபாலனசபையினர், தர்மகர்த்தாக்கம், ஆலயப் பிரதமகுருமார் ஆகிய அனைத்துத் தரப்பினரும் முன்னெடுத்துவரும் இந்தப் பணிகளின் மூலம் சமுதாய மட்டத்திலே சமூகமயமாக்கல் ஏற்பட்டுள்ளதா? என அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் "சமூகமயமாக்கல்" (Socialization) என்பது யாது? முதன் முதல் வீட்டிலிருந்து வெளி உலகிற்குக் காலடி எடுத்து வைக்கும் குழந்தை, சமுதாய மட்டத்திலுள்ள பலதரப்பட்டவர்களுடன் சுமுகமாக உரையாடி, அந்தச் சமூகத்திலே இயைந்து வாழக்கூடிய அனைத்துப் பண்புகளையும் பெற்றுக் கொள்ளல் சமூகமயமாக்கல் எனக் கூறலாம். பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களும் குழந்தைகளைச் சமூகமயமாக்கும் பணியைச் செய்யவே தோற்றம் பெற்றிருக்கின்றன. எனவே ஆலயமும் ஒரு சமூக நிறுவனம் என்பதால் சமூகமயமாக்கும் பணியைச் செய்வதில் ஆலயங்களுக்கு அதிக பங்குண்டு என்பதை எவரும் மறுதலிக்க மாட்டார்கள். ஏனைய நிறுவனங்களைவிட ஆலயங்கள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை. என்ன காரணத்திற்காக ஆலயங்கள் மக்களால் நிர்மாணிக்கபட்டனவோ அதன் பலாபலன்களை மக்கள் பெற்றாக வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ ஏற்ற சமூக இயைபாக்கங்களைக் கொண்ட சமுகமாக மக்கள் குறிப்பாக இளைஞர் சமூகம் வளர்த்தெடுக்கப்படவேண்டும். இதற்கேற்ற முறையிலே ஆலய நிர்வாகிகள், தர்மகர்த்தாக்கள் ஆலயப் பூசகர்கள் தொழிற்பட்டாக வேண்டும்.

இன்று ஆலயங்கள், பொது வைபவங்கள், விளையாட்டு நிகழ்வுகள் போன்றவற்றில் பங்குகொள்ளும் இளஞ் சந்ததியினர் அங்கே வெளிக்காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தைக் கோலங்களைப் பார்த்துப் பொதுமக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. எமது இளஞ் சிறார்கள் எமது கலை, கலாசாரங்களை மறந்து மேலைத்தேய கலாசாரங்களைப் பின்பற்றி வருவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. எமது இனத்திற்கெனத் தனித்துவமான பண்பாடுகள், கலாசாரங்கள் மேலைத்தேய நாகரிக போகத்தில் ஈடுபட்டு வருவதையும் இவற்றையெல்லாம் புத்திஜீவிகள், கல்விமான்கள் பத்திரிகைகளில் விமர்சனம் செய்து வருவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய எதிர்காலப் பிரஜைகள் என்பதால் அவர்களைச் சமுதாயத்தோடு இயைந்து வாழக்கூடிய பெரும்பணியை ஆலயங்கள் முன்னெடுக்க வேண்டும்.

சகல ஆலயங்களிலும் நித்திய, நைமித்திய காமிக பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இப்பூசைகள் நடைபெறும்போது அங்கே வருகின்ற அடியார் கூட்டத்திற்குக் குறிப்பாக இளஞ் சமுதாயத்தினருக்கு ஆலயப் பிரதமகுரு ஒரு சிறு நேரமாவது சமய ஒழுகலாறுகளைப் பற்றி உபந்நியாசம் செய்வது நல்லது. கொடி ஏற்றித் திருவிழா இடம்பெறும் ஆலயங்களில் தற்சமயம் பிரதம குருவானவர் விசேட உரையாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் நாம் மறுப்பதற்கில்லை.

இதே நேரம் இன்னொரு விடயத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது கொடியேற்றித் திருவிழாச் செய்யும் சில ஆலயங்களில் நிர்வாகிகள் ஆலயங்களை ஒரு விற்பனைக் களமாகச் சித்தரித்துப் பொருள் சேர்க்கும் பணியில் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். திருவிழாத் தொடங்கி முடியும் காலப்பகுதி வரை ஒலிபெருக்கிகளின் சத்தத்தில் சுற்றாடலிலுள்ள மக்கள் எவ்வாறான உணர்வுடன் வாழ்கின்றார்கள் என்பதை இவர்கள் ஒருபோதும் தமது கவனத்திலெடுப்பதில்லை. குளிக்கப் போய்ச் சேறு பூசுவது போல இருக்கின்றது இவர்களுடைய செயற்பாடு.

ஆலய வழிபாட்டை ஒரு பாடலடி மூலம் எடுத்துக் கூறலாம்.
ஆடை அணிகலன் ஆடம்பரங்கள்
ஆண்டவன் விரும்புவதில்லை
அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்
ஆலய வழிபாடில்லை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல் கடவுளின் தன்மையையும், அவனை வழிபடும் அடியவர்களின் கையாலாகத் தனத்தையும் காட்டி நிற்கின்றது.

ஆ + லயம் = ஆலயம் என்பது ஆன்மா, லயம் என்பது ஒடுங்குதல் எனப் பொருள் கொண்டால் ஆன்மாக்கள் கூடுகின்ற இடமாக ஆலயங்கள் அமைகின்றன. ஆலயமானது எப்போதும் ஒரு கேளிக்குரியதான இடமாக அமையக்கூடாது. இன்று ஆலயங்கள் இளம் வயதினரும் அங்கே செயல்களிலே ஈடுபடக்கூடிய இடமாகத் திகழ்கின்றது. இருப்பினும் ஒரு சில ஆலயங்கள் சமூக நலத்துறைப் பணியில் பெரும் தொண்டாற்றி வருவதை நினைக்கும்போது உள்ளம் ஒருவாறு தேறுதல் அடைகின்றது. அந்த வகையில் சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள ஆச்சிரமங்கள் ஆற்றிவரும் பணி சிறந்தது. இதனை பொன்னின் குடத்திற்குப்.... என்பதுபோல சைவ சமயத்திற்கு அளப்பெரிய பணியாற்றி வருகின்றது.

வல்லிபுர ஆழ்வார் கோயிலில் ஆர்வலர்களைக் கொண்டு பிரசங்கம் நடத்தல் போன்றன சிறப்புமிக்கது. இருப்பினும் இன்று சில ஆலயங்களில் சாதி ரீதியான பாகுபாட்டை விலக்கி வருவதனாலும் இனங்களுக்கிடையிலான சமூகமயமாக்கம் அடைகின்றது. ஆலயத்தில் இடம்பெறும் விரதங்கள், விழாக்கள் என்பவை மக்களைப் பல்வேறு செயல்களில் ஈடுபடவும் சிறந்த ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தவும் இன்றைய ஆலயம் சிறந்த தளமாக அமைகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்களை நல்வழிப்படுத்தி சமூகத்திற்கு ஏற்புடையனவாக மாற்றும் ஒரு நவீன சமூக சாதனமாக மக்களின் உந்துசக்தியாக ஆலயங்கள் திகழ்கின்றன.

ஒரு சமூகத்தில் சிறந்த ஒற்றுமையை ஏற்படுத்தி மக்கள் அற விழுமியப் பண்புகளைப் பெற்று வாழ்வில் சிறப்பிடம் பெற்று விளங்க இன்றைய ஆலயங்கள் சமூகமயமாக்கலில் மிகவும் உன்னத ஒரு இடம் வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

எனவே இன்றைய காலகட்டத்தில் ஆலயம் சமூகத்திற்கு மாபெரும் பணியாற்றி வருகின்றது.

**(வித்தகர் நூலில் இருந்து பெறப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய் ஆஸ்பத்திரியடி தம்பப் பிள்ளையார் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூளாய் அந்தியேட்டி மடமும் கேணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தின் அடிப்படைகள்

சிந்துநதிக்கரையில் வசித்துவர்களை "சிந்துக்கள்" அல்லது "இந்துக்கள்" எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர். அவர்கள் பின்பற்றிய சமயமே இந்து சமயம் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உண்டு. ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. அதனால் இதன் உண்மைப்பொருளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்துமதம் என்னும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்தி என்ற சொல்லை ஹிம் + து எனப் பிரிக்கலாம். ஹிம் – ஹிம்சையில் இது துக்கிப்பவன் எனப் பொருள்படும். ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அத்துயரத்தைத் தனக்கு ஏற்பட்ட துயரமாகக் கருதி அகற்ற முன்வரவேண்டும். அத்தகையவனே இந்து ஆவான். அப்பண்புமிக்க மக்களைக் கொண்ட மதமே இந்துமதமாகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காமல் வாழ்கிறான். எல்லா உயிர்களின் உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டுள்ளான். ஆதலால் எந்த உயிரின் உடலுக்குத் துன்பம் நேராவண்ணம் அவைகளிடம் அன்பு செலுத்தினால் அருள் வடிவமாகிய ஆண்டவனது அருள்பெறலாம். இதனை திருமூலர் தம் திருமந்திரத்தில்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாய தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் என்பதற்கு "சனாதன தர்மம்" என வேறு ஒரு பெயரும் உண்டு. இதற்கு அழிவில்லாத அறம் என்பது பொருள். மேலும் இந்து சமயம் முறையே திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்ற பல பெயர்களைக் கொண்டது. சமயம் என்பதற்கு "சமை" என்பது பகுதியாய் உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருளைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு பக்குவப்படுத்துவது இதன் பொருளாகும்.

இந்து சமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம். பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து சமயத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளன. ஆதலால் உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாய்ச் சமயமாக இந்து சமயம் உள்ளது எனக் கூறலாம்.

## அறுவகைச் சமயங்கள்

இந்து சமயம் முறையே சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்று ஆறுவகையாகப் பகுத்துக் கூறப்படுகிறது.

திருமூலர் இதனை "ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள்" என்று கூறுகிறார். முதலில் சைவம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்ட சமமய் "சைவம்" எனப்பட்டது. சைவத்தில் பதி, பசு, பாசம் ஏனனும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாய் கூறப்படுகிறது. இவற்றை இறைவன் உயிர், தளை எனவும் கூறுவர்.

அடுத்து வைணவம் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவமாகும். இது வடகலை, தென்கலை என இருவகைப்படும். வடகலையார் வடமொழியில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதசாத்திரங்களுக்கு முதலிடம் கொடுப்பர். தென் கலையார் தமிழ்மொழியில் உள்ள ஆழ்வார்களால் அருளப்பெற்ற பிரபந்தங்களுக்கு முதலிடம் தருவார்கள்.

இன்னொன்று காணாபத்யம். கணபதியே முழுமுதற் பரம்பொருள், ஓங்கார வடிவினனாக அவரை வழிபடவேண்டும் என்ற கோட்பாட்டை உடையது காணாபத்யம். இதனை காணாபத்யம் எனவும் கூறுவர்.

கௌமாரம் என்பது குமாரனாகிய முருகனே கடவுள். பேரின்பவடிவினனாக அவனை வழிபடவேண்டும் என்ற கோட்பாட்டை உடையது. சக்தியை வழிபடு கடவுளாகக் கொள்ளும் சமயமே சாக்தம் ஆகும். சக்தி வழிபாடு – சக்தியே தெய்வம். அவரைத் தாயாக வழிபடவேண்டும் என்ற கோட்பாட்டை உடையது.

சூரியனை வழிபடுகடவுளாகக் கொள்வது சௌர சமயமாகும். போரொளி வடிவினனாக அவனை வழிபடவேண்டும் என்று கூறுவது இச்சமயமாகும்.

சிவஞானசித்தியார், "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" கடவுள் இயங்குகிறார் என இயம்புகிறது. இதன் அடையாளமாகவே நமது சிவ ஆலயங்களில் கணபதி, முருகன், சூரியன், விஷ்ணு, அம்மையப்பர் மற்றும் துர்க்கையம்மன் ஆகிய திருவுருவங்களை அமைத்து வழிபாடு செய்து வருகின்றோம்.

## இந்து சமய இலக்கியங்கள்

ஒவ்வொரு சமயத்திற்கும் முக்கியமான சமயநூல் ஒவ்வொன்று உள்ளது. நமது இந்து சமயத்திற்கும் வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களானது தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது. வேதங்களை வியாசர் நான்காக வகுத்துள்ளார். வேதங்களோடு தொடர்புடைய சம்ஹிதைகள், பிராமணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்கள் இந்து சமய இலக்கியங்களாய் பெருமை சேர்க்கின்றன.

அடுத்து ஆகமம். ஆகமம் என்றால் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி வீடுபேற்றை அருளுதல். இவை மொத்தம் இருபத்தெட்டு ஆகமங்கள். தமிழ் கடவுள் சிவன் மீது பாடப்பட்டவை திருமுறைகள். திருமுறை என்பதற்கு தம்மை அடைந்தவர்களை சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறுவர். திருமுறைகள் பன்னிரண்டு ஆகும்.

வைணவ சமயத்தில் விஷ்ணுவை தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்ட பன்னிரு ஆழ்வார்கள் அருளிச்செய்தவை. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும். அதேபோல சாத்திரங்கள். இவை பதினான்கு சாத்திரங்கள். இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். இவற்றில் தலைசிறந்தது சிவஞானபோதம். சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள். ஞானம் என்றால் அதனை அறிதல். போதம் என்றால் தெளிதல். எனவே சிவஞானபோதம் என்றால் ஒப்பறற் மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து உதவும் நூல் என்று பொருள். இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது.

இதனையடுத்து அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது சிவஞானசித்தியார் என்பதாகும். மேலும் உமாபதி சிவாசாரியாரால் எட்டு நூல்கள் எழுதப்பட்டன. மெய்கண்டார், அருள்நந்தி, உமாபதி சிவம் ஆகிய சந்தனாச்சாரியார்கள் சைவ சித்தாந்தத்தை முறைப்படுத்தியவர் என்ற பெருமை படைத்தோராவர்.

இந்தியாவின் இரு ஒப்பற்ற காவியங்கள் இராமாணம் மற்றும் மஹாபாரதம் ஆகும். இதிகாசம் ன்பதற்கு "ஐதீகத்தை நிரூபணம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு" என்று பொருள். இராமாயண காவியத்தை இயற்றினால் வால்மீகி முனிவர். பாரதத்தை வியாச முனிவர் இயற்றினார். இதனை ஐந்தாம் வேதம் என்று சிறப்பித்துக்கூறுவர். பகவத்கீதை இதனுள் அடங்கியுள்ளது.

அடுத்து புராணம். புராணம் என்பதற்கு பழமையான வரலாறு என்பது பொருள். புராணங்களை எழுதியவர் வேத வியாசர். இதனை உலகிற்கு அளித்தவர் சூதபுராணிகர் என்பதை அறிவோம். இந்த மகாபுராணங்கள் பதினெட்டு ஆகும்.

## இந்துசமயக் கோட்பாடுகள்

இந்து சமயம் வலியுறுத்தும் சாதாரண அறக்கோட்பாடுகள் தவிர முக்கியமானவை இரண்டு.

1) வேதாந்த நெறிகள்

2) பகவத்கீதையில் கூறப்படும் நான்கு யோகங்களாகிய மார்க்கங்கள்.

வேதாந்த நெறிகள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகும்.

அத்வைதக் கோட்பாட்டை உலகிற்களித்தவர் சங்கரர். அத்வைதம் என்னும் சொல்லை அ=துவைதம் எனப் பிரிக்கலாம். அ= இல்லை, துவை தம் ஸ்ரீ இரண்டு. அத்வைதம் ஸ்ரீ இரண்டற்ற ஒன்று. "அகம் பிரம்மாஸ்மி" நான் பிரம்மமாய் இருக்கிறேன் என்பது. "பிரம்மம்" என்ற பொருளே உண்மை, நிலையானது. ஜீவன்கள் அனைத்துமே பிரம்மம் ஆவர். இறைவனைப் பரமாத்மா என்றும் உயிர்களை ஜீவாத்மா என்றும் ஒவ்வொரு ஜீவாத்மாவும் "பரமாத்மாதான்" என்பதே இவ்வுயரிய கோட்பாடு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல விசிஷ்டாத்வைதம் இவ்வேதாந்த நெறியை உலகிற்கு அளித்தவர் இராமானுஜர் ஆவார். விசிஷ்ட + அத்வைதம் ஸ்ரீ விசிஷ்டாத்வைதம். அத்வைதம் இரண்டற்ற ஒன்றாக உள்ளது. விசிஷ்டம் – விசேஷம். விசிஷ்டாத்வைதமானது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருளானவை என்றும் ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் கூறுகிறது. சித்து, அசித்துச் சேர்க்கையால் விளங்கும் இரண்டற்றதான பிரம்மம் உண்டென்பதே உட்கருத்து.

அடுத்து துவைதம் இந்நெறியை அல்லது சமயத்தைப் பரப்பியர் மத்துவர். இவர் துளுவ நாட்டில் உள்ள உடுப்பிக்கு அருகில் அநந்தேஸ்வரம் என்னும் கிராமத்தில் அவதரித்தார். தமது ஒன்பதாம் வயதில் அச்சுதபிரகாசரின் சீடராகி துறவு மேற்கொண்டார்.

இன்னொன்று துவைதம், துவி என்றால் இரண்டு. பிரபஞ்சமும், பரமாத்மாவும் வேறானவை. பரமாத்மா தனி, மற்றையவை அதில் சேராதவை என்பதாகும். பரமாத்மா, ஜீவாத்மா, ஜட உலகம். இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். உலகம் ஒரு தோற்றம் அன்று. சுதந்திரம் இறைவனுக்கு மட்டும் உண்டு. கர்மத்தை நீக்கினால் வீடுபேற்றை அடையலாம் என்பதை வலியுறுத்தும் கோட்பாடு.

## நான்கு மார்க்கங்கள்

மனிதன் தான் போகின்ற போக்கிலேயே விட்டால் அவன் படிப்படியாக நிதானமாய் வளர்ச்சியடைவான். மேலும் ஒருபடி சென்று தெய்வீகத்தன்மை அடையலாம். இப்படி காலத்தே வளர்ச்சி தானே நிகழும் என இருதலை "எறும்பு வழி" அல்லது பிப்பீலிகா மார்க்கம் என்பர்.

மாறாக மனிதன் தன் உடல், மூச்சு, மனம், அறிவு, ஆகியவற்றை பயன்படுத்தி பெருமுயற்சி செய்து இறையருளைப் பெற்று விரைவில் தன்னை முன்னேற்றிக் கொள்வது "விஹங்கம மார்க்கம்" அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பறக்கும் வழி" எனப்படும். தன்னைத் தானே உயர்த்திக்கொள்ளும் மார்க்கங்கள் (நெறிகள்) முறையே, ஞானமார்க்கம், இராஜமார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் என்பனவாகும்.

இவை முறையே ஞானநெறி, இராஜநெறி, கர்மநெறி மற்றும் பக்திநெறி என்றும் யோகம் என்றும் போற்றப்படுகின்றன.

முதலில் ஞானமார்க்கம் கூர்மையான அறிவுடையவர்கள் நல்லதையும் கெட்டதையும் அறிந்து, என்றும் நிலைத்திருப்பதையும், விரைவில் அழிந்துவிடுவதையும் சிந்தித்து உணரும் ஆற்றல் உடையவர்கள்.

இவ்வறிவின் துணைகொண்டு சத்தியத்தையும் முழுமையான பரம்பொருளைத் தேடும் வழியே "ஞானமார்க்கம்" எனப்படும்.

இரண்டாவது இராஜமார்க்கம். மனிதன் சுயஉணர்வுடன் உடம்பு, மூச்சு, மனம் இவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, தனக்குள்ளே ஒளிந்துகிடக்கு சக்திகளைத் தூண்டி வெளிப்படுத்துவது "ராஜயோகம்" எனப்படும். இதுவே இராஜமார்க்கம் எனப்படுகிறது. இதன் இறுதி இலட்சியம் மனதில் அல்லது உணர்வில் தோன்றும் அலைகளை அடக்குவது ஆகும். "ஓம்" என்ற பிரணவம் இங்கு வழிபடப்படுகின்றது.

மூன்றாவது கர்ம மார்க்கம். வாழ்க்கையில் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் இரண்டு விதமான பயன்கள் இருக்கவேண்டும். ஒன்று அச்செயலினால் சமுதாயத்திற்கும் லாபம் கிடைக்கவேண்டும், இரண்டு அச்செயல் அவனுடைய தெய்வ பக்தியை வளர்க்கவேண்டும்.

இந்த இருவிதமான பயன்கள் உடையவையாக ஒவ்வொரு செயலையும் ஆக்கும் விதியைக் கர்மநெறி என்ற பெயரில் பகவத்கீதை உணர்த்துகிறது. தொழில் வாழ்க்கை, புறவாழ்க்கை என்ற வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையையும் குளித்தல், நடத்தல், உண்ணுதல், தானம் செய்தல் போன்ற சொந்த வழக்கையின் செயல்கள் ஆகிய அனைத்துமே நமக்கு அக இன்பமும், சமுதாய நலமும், வளரும்படி செய்கின்றன. ஒரு மனிதன்தன் சொந்த வாழ்க்கையில் செய்கின்ற ஆசனம், பிராணாயாமம், தவம், நன்நூலறிவு ஆகிய அனைத்தும் உலக நன்மைக்கும் உதவும்படிஎல்லோம் இன்ப வாழ்வுவாழ கீதை வழி சொல்கின்றது. எனவே சமுதாயத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை முறையாகவும் திறமையாகவும் ஆற்றுவதை கர்மமார்க்கம் எனலாம்.

நான்காவது பக்தி மார்க்கம். பரம்பொருள் மீது கொண்ட அன்பினால் மனிதன் அகந்தையை ஒழித்து, தன் சிறுமையைத் தவிர்த்து, உலகலாவிய உணர்வுள்ளவாய் தியாகம், அன்பு வாயிலாக உயரிய நிலையை அடைவது பக்தி மார்க்கம். பக்தன் எதை நம்புகிறானோ அதுவாகவே தான் ஆகிவிடுகிறான் என்பது கீதையில் கண்ணன் கருத்து. இதை உணரும் விதம் நாம் பின்வருவனவற்றில் காணலாம். அடக்கமுடைய சரஸ்வதி போன்ற தெய்வங்களை வணங்கும்போது பக்தனும் பணிவுடையவன் ஆகிறான். பற்றற்ற சிவனாரை வணங்கும்போது பக்தனும் பற்றற்றவனாகிறான். அன்பு மிகுந்த கண்ணனை வணங்கும்போது பக்தனும் பணிவுடையவன் ஆகிறான். பற்றற்ற சிவனாரை வணங்கும்போது பக்தனும் பற்றற்றவனாகிறான். அன்பு மிகுந்த கண்ணனை வணங்கும்போது பக்தனும் அன்புடையவனாகிறான்.

ஆறு குணங்களைக் கொண்ட இறைவனை பக்திப் பரவசத்தால் வழிபடும்போது நாமும் அந்த ஆறு நற்குணங்களை உடையவர் ஆகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதம் சொன்ன "மறுபிறவித்தத்துவம்" உண்மையா?

பழையதாகிவிட்ட சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டுப் புதிய சட்டையை அணிந்துகொள்வதைப்போல, உடலுக்குள் இருக்கும் ஆத்மா பழைய உடலை உதறிவிட்டு, புதிய உடலைநாடிப் போகிறது.

பகவத்கீதை 11:22

ஒவ்வொருவரும் தனது முற்பிறவியில் செய்த வினைகளைப் பொறுத்து மறுபிறவியை அடைகிறார்கள். இந்தப் பிறவியில் செய்யும் கருமங்களின் பலனை அடுத்த பிறவியிற் பெறுகின்றார்கள். இது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம்.

ஆத்மாவுக்கு அழிவில்லை. ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வொரு உடலைத் தேடிக்கொண்டு அது தனது பயணத்தைத் தொடருகிறது. இது இந்து மதத்தின் முக்கியமான கொள்கை.

முற்பிறவியின் வாசனைகளே இந்தப் பிறவியில் நமது பண்புகளாக அமைகின்றன. இந்த வாசனைகளின் வேகம் நம்மைப் பிடித்திருக்கும் வரையில் நம்மால் பந்தங்களை விலக்கிக்கொள்ளமுடியாது. இது இந்து மதத்தின் பெரியோர்கள் நமக்காக வகுத்த வழி.

இதைப்பற்றி இன்றைய விஞ்ஞானம் என்ன இலங்கையின் ஒவ்வோர் ஆண்டும் பத்திரிகைகளில் குழந்தைகள் தமது பூர்வஜென்மத்தை நினைவுகூர்ந்த நிகழ்ச்சி, செய்தியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. கிராமத்தில் உள்ள குழந்தை நகரத்தில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்ததாக தனது முற்பிறவியைப் பற்றிக் கூறுகிறது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குத் தெரியாத மொழியில் பூர்வஜன்ம நினைவுகளை வெளியிடுகிறது.

இவற்றில் பலவற்றைச் சோதனைக்காக எடுத்துக்கொண்டு இந்தியாவிலும் அமெரிக்காவிலும், ஜேர்மனியிலும் ஆராய்ச்சிகளை நடத்தி இருக்கிறார்கள். உத்தரப் பிரதேசப் பல்கலைக்கழகத்தில் இது பற்றிய மனோதத்துவ ஆராய்ச்சிக்கு (Bureau of psychology) என்று ஒரு தனிப் பிரிவு இருக்கின்றது. இராஜஸ்தானத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் இது பற்றிய ஆராய்ச்சிக்காகவே (Department of para-psychology) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து டாக்டர் கார்லிஸ் ஒஸிஸ், டாக்டர் ஹெறால்ட்ஸ்ன் போன்ற பேராசிரியர்கள் இந்தியாவுக்கு வந்து இதற்காக ஆராய்ச்சிகளை நடத்தி இருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட "கேஸ்கள்" சிலவற்றைப் பார்ப்போம்.

சக்திபால் சர்மா என்ற மருந்து வியாபாரி அவருடைய அலுவலகத்தில் கொல்லப்பட்டார். அவரைக் கொலைசெய்தது யார் என்பது மர்மமாகவே இருந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு டில்லியில் ஒரு குழந்தை இதைப் பற்றிப் பேசத் தொடங்கிற்று. தனது பெற்றோரை அழைத்துக்கொண்டு வந்து சக்திபாலின் மனைவியை அடையாளம் கண்டு, தான் சுடப்பட்ட இடம், நேரம் எல்லாவற்றையும் சரியாகச் சொன்னதுடன், தன்னைச் சுட்டுக்கொன்றது தனது தம்பியே என்ற உண்மையையும் வெளிப்படுத்திற்று!

மிருதுலா என்ற இரண்டு வயதுப் பெண் குழந்தைக்கு முதன் முதலாக "லீசிஸ்" என்ற இனிப்பு வகையைக் கொடுத்ததும் அது இந்த இனிப்பை விரும்பிச் சாப்பிட்டதுடன், தனது முற்பிறவியில் அந்த "லீசிஸ்" இனிப்பைச் சாப்பிட்ட உணவகம் இருக்கும் இடத்தையும் சொல்லிற்று! அங்கே குழந்தையை அழைத்துக்கொண்டு போனபோது, தனது பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர், நண்பர் ஆகியோரைக் குழந்தை அடையாளம் காட்டிற்று. புதிதாக வீட்டில் கட்டப்பட்டிருந்த பகுதியையும் சொல்லிற்று. "நான் நட்சத்திரங்களிடையே பறந்துபோனேன். நான் விரும்பியபடி மீண்டும் வந்து பிறந்தேன்! என்று கூறினாள் மிருதுலா.

இதைப்போன்ற "கேஸ்" களை அவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். தனக்குத் தெரியாத புதிய மொழியில் குழந்தை பேசுவதைக் கண்டார்கள். இவ்வாறு பேசுவதற்கும், திறமையை வெளிப்படுத்துவதற்கும், எதிரொலிக்கும் செயல்திறன் (Responsive Xenoglossy) என்ற பெயரிட்டார்கள்.

மொஸார்ட் நான்கு வயதில் கீர்த்தனைகள் இயற்றி இருக்கிறார். ஜொஹான்காஸ் தனது தந்தையின் கணிதப் புத்தகத்தில் உள்ள தவறுகளை மூன்றாவது வயதில் சுட்டிக்காட்டி இருக்கிறார். ஜான்ஸ் டூவர்ட்மில் பான்மெக்காலே போன்ற அறிஞர்கள் நடக்க ஆரம்பிக்காத குழந்தைப் பருவத்திலேயே கட்டுரைகளை எழுதத் தொடங்கி இருக்கிறார்கள்.

இவை இந்தப் பிறவியில் அவர்கள் கற்றுத்தெரிந்து பெற்ற சிறப்பு அல்ல. பின் அந்தத்திறமை அவர்களுக்கு எப்படி வந்தது. முற்பிறவியின் எதிரொலி அல்லது அந்தக் குடும்பத்தில் இருந்த பெரியவர் ஒருவரின் செயல்திறமையின் எதிரொலி என்றே கூறப்படுகிறது.

விஞ்ஞானிகள் நான்கு அடிப்படைகளை மறுபிறவித் தத்துவத்தின் ஆதாரமாக வகுக்கிறார்கள்.

1) ஒரு பிறவிக்கும் இன்னொரு பிறவிக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கிறது. ஒரு சக்தி இந்த இரண்டிற்கும் இணைப்பாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஒரு பிறவியில் தான் சாதிக்க முடியாதவற்றைச் செய்துமுடிக்க ஏங்கும் ஓர் அந்த உடலின் எல்லைகளைக் கடந்து போனதும், அடுத்த பிறவியில் அவற்றைச் சாதிக்கும் சக்தியைப் பெறுகிறது.

3) ஒரு பிறவியில் செய்த காரியங்களின் எதிரொலியாக, அடுத்த பிறவியின் நிகழ்ச்சிகள் அமைகின்றன.

4) மனித உள்ளத்தில் ஊறிப்போயிருக்கும் நம்பிக்கையின் உறுதியே அவனுடைய அடுத்த பிறவியின் சாதனைகளுக்கு அடிப்படையாக ஆகிறது.

இறந்துபோகும் நிலையை எட்டி, டாக்டர்களால் உயிர்பிரிந்துவிட்டதாகக் கூறப்பட்டவர்கள், கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்பெற்றிருக்கிறார்கள். அந்தநிலையில் அவர்கள் தமது அனுபவங்களை எடுத்துக்கூறி இருக்கிறார்கள். ரேமாண்ட் மூடி என்ற டாக்டர் இதை "வாழ்க்கைக்குப் பிறகு வாழ்க்கை" என்று ஒரு புத்தகமாகத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த எலிசபெத் குபின்ராஸ் என்ற பெண் மனோதத்துவ நிபுணரும் இதே போன்ற ஆராய்ச்சிகளைச் செய்து புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.

"உடலைவிட்டு நீங்கிய பிறகு ஒளிபொருந்திய வழி எங்களுக்குப் புலப்பட்டது. ஒருவிதமான துன்பமோ, வேதனையோ இல்லாத இன்ப உணர்வு எங்களுக்குக் கிடைத்தது. எங்களுடைய முன்னோர்கள் சிலையும் அடையாளம் காணமுடிந்தது!" என்று பல்வேறுவிதமாக அவர்கள் பேட்டிகளில் கூறியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹெலன் வாம்பெக் என்பவர் "வாழ்க்கைக்கு முன் வாழ்க்கை" என்ற ஆராச்சியைப் செய்திருக்கிறார். இந்தப் பிறவியில் பெறும் அனுபவங்களுக்குப் பின்னணியாக அவர்களை ஹிப்னாடிசத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமான மயங்கவைத்து முற்பிறவியைப் பற்றியும், கர்ப்பத்தில் இருந்த நிலையையும் கூறும்படி செய்திருக்கிறார்.

"ஏன் இந்தக் குடும்பத்தில் வந்து பிறந்தீர்கள்?" "முற்பிறவியில் உங்கள் ஆசை என்ன? – "கடந்த பிறவியில் நிறைவேறாத ஆசை. இந்தப் பிறவியில் நிறைவேறியதா?" என்பது போன்ற கேள்விகளுக்குப் பதிலைப் பெற்றிருக்கிறார். "தாயின் வயிற்றில் இருந்தபோது எனக்கு வெளிஉலகக் குரல்கள் கேட்டன. நான் என் தாயுடன் உதைந்து விளையாட முடிந்தது". என்பது போன்ற பதில்களும் கிடைத்திருக்கின்றன.

இந்த இரண்டு ஆராய்ச்சிகளும் இரு பிறவிக்ளுக்கு உள்ள தொடர்பையும், மரணத்துக்குப் பிறகு வாழ்க்கை தொடர்கின்றது என்ற உண்மையையும் வெளிப்படுத்தியிருக்கின்றன. உடலிலிருந்து உயிர் நீங்கியபிறகு நினைவுகள் தொடர்கின்றன என்ற உண்மையும் வெளியாகி இருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்கள், இந்திய டாக்டர்களையும் சந்தித்திருக்கிறார்கள். இந்திய – அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையை ஒப்பிட்டிருக்கிறார்கள். தாங்கள் சேகரித்த தகவல்களைக் கணனிகளின் உதவியால், பண்புகளாக வகைப்படுத்தி தொகுத்திருக்கிறார்கள்.

இந்திய நிபுணர்களான பேராசிரியர் எச்.என். பானர்ஜி, டாக்டர் ஷிகா திரிவேதி இவருவரும் இத்தகைய "கேஸ்களை" முழு விபரங்களுடன் புத்தகமாகத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் இது பற்றிய சர்ச்சைகளும், ஆராய்ச்சிகளும் நடந்திருக்கின்றன. நரம்பு–மனோ வியாதிகளும் அதன் தீர்வுகளும் பற்றிய மருத்துவப் பத்திரிகை (Journal of the nervous and mental Diseases) இது பற்றிச் சிறப்பிதழையே வெளியிட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கர்மா தியரி" என்பது என்ன? எந்தச் செயலுக்கும் பிரதியாக ஒரு விளைவு உண்டு. காரணமும் – விளைவும் இருப்பதாகவும், செயலுக்கு எதிரொலியாக மறுசெயல் விளைவதாகவும், பௌதிகத்தில் தவிர்க்கமுடியாத விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இதையே மனித வாழ்க்கைக்கும் பொருத்தி 'கர்மக் கொள்கையை' நமது ஆன்றோர்கள் கூறுகின்றார்கள். பிரபஞ்சத்தில் ஜடமான பூதங்களைப் போலவே, சைதன்யம் என்ற அறிவுள்ள ஜீவன்களும் அடக்கம். இவை ஒன்றுசேர்ந்ததுதான் லோக வாழ்வு. எனவே ஒன்றுக்கு இருக்கிற நியதி, தர்மம் இன்னொன்றுக்கும் இருந்தாக வேண்டும். மனிதனுடைய ஒவ்வொரு கர்மாவுக்கும் விளைவாக ஒரு பலன் உண்டாக்கித்தான் தீரவேண்டும் என்பதே கர்மவினைக் கொள்கை (karma Theory).

"பாபகர்மம் செய்வதால் அதற்கான தண்டனையை மனிதன் அனுபவித்தே ஆகவேண்டும். புண்ணியகர்மம் செய்தால் அதன் பலனை நற்பலனாக அவன் அனுபவித்தே ஆகவேண்டும் என்கிறது நமது மதம். இம்மாதிரி பாபபுண்ணிய கர்மங்களை மனிதன் அனுபவிக்கவேண்டும் என்பதனாலேயே, அவனுக்குப் பல பிறவிகள் உண்டாகின்றன என்கிறது நமது மதம். நல்லது செய்யவேண்டும் என்றும் – கெட்டது செய்யக்கூடாது என்றும் சகல மதங்களும் சொன்னாலும் அவை நமது மதத்தைப் போல, காரணம் – விளைவு என்ற தொடர்பை அழுத்திச் சொல்லுவதில்லை.

"இவை தத்துவ ரீதியாகவும், வழிபாட்டு ரீதியாகவும் இந்து மதத்தில் உள்ள விஷேசமான அம்சங்கள்". இவ்வாறு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள், "நம் மதத்தின் தனி அம்சங்கள்" என்ற கட்டுரையில் குறிப்பாக எடுத்துக்கூறி இருக்கிறார்.

இந்தத் தத்துவத்தை நமது மதத்தின் எல்லையைக் கடந்த பெரியோர்கள் பலர் உணர்ந்து பாராட்டி இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் – ஆராய்ச்சியாளர்கள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள். பைதகரஸ் (கணிதமேதை), பிளேட்டோ (தத்துவஞானி), விக்டா ஹியூகோ (நாவலாசிரியர்), தாமஸ் எடிசன் (விஞ்ஞானி), பால்காகின் (ஓவியர்), தாமஸ் கால்லைஸ் (கட்டுரை ஆசிரியர்), எச்.ஜி. வெல்ஸ் (விஞ்ஞான ஆராய்ச்சியாளர்) போன்ற பலரும் இப்படிப் பாராட்டியவர்கள் ஆவார்கள்.

அன்று நமது இந்துமத நூல்கள் எடுத்துக்கூறிய தனிச்சிறப்பு வாய்ந்த தத்துவமே, இன்று விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின் பலனாக, முடிவுகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

("Is Reincarnation Possible" என்ற முதல் சர்மா எழுதிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம்
# மூதறங்கள் முப்பத்திரண்டு

அன்பர்க்கு வணக்கம்!

மூதறிஞர் என்பதற்கு மூத்த அறிஞர் என்பது பொருள் அன்று. பேரறிஞர் என்பதே பொருள். அதேபோன்று மூதறங்கள் என்றால் பேரறங்கள், பெரிய தருமங்கள் என்று பொருள் கொள்ளவேண்டும். “அறம் செய விரும்பு” என்று ஒளவையார் கூறியது அறத்தைப் பற்றிப் பொதுவாய்க் கூறப்பட்ட சுருக்கமான கருத்தேயாம். ஆனால் அறத்தில் முப்பத்திரண்டு பிரிவுகள் உள்ளன என்பதைத் திருக்கடவூர் அபிராமிபட்டர் அருளிய அபிராமி அம்மைப் பதிகத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

“தாயே! முப்பத்திரண்டு அறங்களையும் காத்து நிற்கின்ற மகா சக்தியாகிய உன்னுடைய கணவன் பமசிவன் மட்டும் கையினில் ஓடு ஏந்தி பிக்ஷயேற்றுத் திரிகின்ற பிக்ஷடனனாய் இருப்பது ஏன்?” என்று கேட்பதுபோல் அமைந்த பதிகம் அது. இவ்வாறு சிறப்பித்துக் கூறப்படும் அந்த முப்பத்திரண்டு வகை அறங்கள் எவை என்பதை இங்கு பார்க்கலாம்.

1) ஆதுலர்சாலை – விளக்கம் தனியாகக் கீழே தரப்பட்டுள்ளது.
2) ஓதுவார்க்கு உணவு – வேத மந்திரங்களை ஓதுவிப்பவர்களின் பசியாற்றுதல்.
3) அறு சமயத்தார்க்கு உணவு – ஆறு சமயங்களின் மூலம் ஆன்மீகத்தை வளர்க்கும் சமய ஆச்சாரியார்களைப் போஷித்தலாகிய அறம்.
4) பசுவுக்கு வாயுறை – பசுவுக்கு ஒருபிடி புல்லேனும் ஈதல்.
5) சிறைச்சோறு – விளக்கம் தனியாகக் கீழே தரப்பட்டுள்ளது.
6) ஐயமிடுதல் – சாதாரணமாக யாசகர்க்குப் பிச்சை ஈடுவதை இது குறிக்கிறது.
7) நடைத் தின்பண்டம் – நடந்து செல்லும்போது வழிப்போக்கருக்குச் சிறு தின்பண்டம் அல்லது வயல்வழியே செல்வார்க்குத் தின்னக்கூடிய அறுவடைப் பொருள்களை, அவர்களை வலியக்கூவி அழைத்து வழாங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) மகச்சோறு – திக்கற்ற சிறு குழந்தைகளுக்குச் சோறு ஊட்டிப் பசியாற்றுதல்.

9) மகப்பெறுவித்தல் – ஒரு பெண்ணுக்கு அவளுடைய பிரசவத்தின்போது செய்யப்படும் உதவிகள்.

10) மகவளர்த்தல் – அனாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்தல்.

11) மகப்பால் – விளக்கம் தனியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

12) அறவைப்பிணம் சுடுதல் – அறைவை என்றால் ஆதரவற்ற நிலை. அதாவது ஆதரவற்ற அனாதைப் பிணத்தைத் தகனம் செய்வதான அறம்.

13) அழிந்தோரை நிறுத்துதல் – புயல், பூகம்பம், ஆழிப்பேரலை (சுனாமி) போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது உற்றாரையும் உடைமைகளையும் முற்ற இழந்து தவிக்கும் மக்களை வாழ்வித்தல்.

14) வண்ணார்.

15) நாவிதர்

மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களான வண்ணாரையும் நாவிதரையும் போக்ஷித்தல்.

16) வதுவை – கன்னியின் திருமணத்துக்குத் தாலி, கூறைப்புடவை, மணமாலைகள் தந்து உதவுதல்.

17) பூணூல் – பூணூலணியும் வழக்கம் உடையோர்க்குப் பூணூல் தானம் செய்தல்.

18) நோய் மருந்து – வியாதிக்கு ஏற்ற மருந்தை இலவசமாக வழங்குதல்.

19) கண்ணாடி – பார்வை குன்றியவர்க்கு கண் கண்ணாடியை இலவசமாக வழங்குதல்.

20) நாள் ஓலை – ஒருவர்க்கு அன்றே தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய செய்திகளைத் தாமதமின்றித் தெரிவித்தல்.

21) கண் மருந்து – கண்நோய்க்கு இலவசமாய் மருந்து வழங்குதல்.

22) தலைக்கு எண்ணெய் – தலைக்கு இட்டுக் குளிக்க நல்லெண்ணை வழங்குவதான அறம்.

23) கன்னிகா தானம் – அனாதைப் பெண்களுக்குத் திருமணம் செய்வித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) அட்டூண் – இயலாதவர்க்கு உணவு சமைத்துக் கொடுத்தல் (அடுதல் – சமைத்தல்)

25) பிறர் அறங்காத்தல் – ஒவ்வொருவரும் தத்தமது சுதர்மத்தில் நிலைத்து நிற்க உதவி புரிதல்.

26) தண்ணீர்ப்பந்தல் – அவசியமான காலத்தில் அவசியமான இடங்களில் தண்ணீர்ப்பந்தலை அமைத்து மக்களின் தாகத்தைப் போக்குதல்.

27) மடம் – ஆன்மீகத்தை நாடும் மக்களுக்கு ஆன்மீகத்தைப் போதிக்கவும், அவர்களின் பசியை ஆற்றவும் மடங்களை நிறுவுதல்.

28) தடம் – இருமருங்கிலும் நிழல்தரும் மரங்களுடனும் குடிநீர்க் குளங்களுடனும் கூடிய சாலைகளை அமைத்தல்.

29) கா – வழிப்போக்கர் தங்க நிழலும் குடிநீரும் கிடைக்கும்படியான பூங்காவையும் மரச்சோலைகளையும் உருவாக்குதல்.

30) ஆவுரிஞ்சு நடுதறி – விளக்கம் தனியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

31) ஏறுவிடுதல் – பசுவுக்குக் காளை மூலம் கர்ப்பதானம் செய்தல்.

32) விலைகொடுத்துக் கொல்லுயிர் மீட்டல் – விளக்கம் தனியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

விளக்கங்கள்

1) ஆதுலர்சாலை – ஆதுலர் என்றால் தரித்திரர். உணவின்றி வறுமையில் வாடும் வறியவர்கள் பசியாறும்படி அன்னச்சத்திரம் கட்டிப் பராமரித்தல். முப்பத்திரண்டு அறங்களில் இதுவே முதல் அறமாகக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். பசிக்கு உணவு அளிப்பது மட்டும அறம் என்று மணிமேகலை கூறியதை நினைவு கூரவேண்டும்.

5) சிறைச்சோறு – சிறைச்சாலையில் சிறைக் கைதிகளுக்குப் போதிய உணவு தரப்பட்டாலும் அது கண்டிப்புடன் கூடிய அன்பற்ற உணவாக இருப்பதால், நன்மக்கள் இயன்ற சமயங்களில் சிறைச்சாலைக்குச் சென்று சிறை அதிகாரிகளின் அனுமதியுடன் எளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவேயாயினும் அத்துடன் அன்பையும் கனிவையும் கலந்து சிறைக் கைதிகளுக்கு வழங்கவேண்டும்.

11) மகப்பால் – ஏழ்மை காரணமாகத் தாய்க்குப் போதிய உணவு உண்ணக் கிடைக்காததால் தாயிடம் தாய்ப்பால் வற்றி ஸ்தனங்களில் துவாரம் அடைபட்டுப் போனதை அறியாத குழந்தை பாலுக்காக ஏங்கித் தாயின் முகம்பார்த்து அழுகிறது. அத்தாயும் தன் சேயின் முகம்பார்த்து அழுகின்றான். இத்துயரக் காட்சியை "இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை" (இல்லி – ஓட்டை, துவாரம்) என்ற ஒரு வார்த்தையின் மூலம் படம்பிடித்துக் காட்டுகிறது சங்க இலக்கியம் ஒன்று. தாயையோ தாய்ப்பாலையோ இழந்துவிட்ட குழந்தைக்கு மற்றொரு தாயின் மூலம் தாய்ப்பாலை ஊட்டச்செய்வது இவ்வறம்.

30) ஆவுரிஞ்சு நடுதறி – ஆ – பசு; உரிஞ்சுதல் – உராய்தல், தேய்த்தல்; நடுதறி நடுகின்ற கல் அல்லது மரக்கட்டை பசுக்களுக்கு நம்மைப்போலவே அவற்றின் உடம்பில் தினவு ஏற்படும். ஊர்தல் என்னும் அத்துடன்பத்தைச் சொறிந்துவிட்டு ஆற்றிக்கொள்ள அவற்றுக்குக் கைகள் இல்லை. அதனால் அவை அத் துன்பத்திலிருந்து விடுபடுவதற்காகத் தம் உடம்பை உராசியும் தேய்த்தும் தீர்த்துக் கொள்ளும் வகையில் மேய்ச்சல் வெளிகளிலும், கிராமச்சாலை ஓரங்களிலும் ஆங்காங்கே நடப்படும் ஒற்றைக் கருங்கல், தூண் அல்லது மரக்குற்றியை (குற்றி – மரத்திம்மை) இது குறிக்கிறது. முன்னாளில் தமிழ்நாட்டில் திரும்பிய பக்கமெல்லாம் சுமைதாங்கிக் கற்கள் காணப்பட்டன. மனிதன் மனம் சுருங்கிப் போனதால் இன்று அத்தகைய அறச் சின்னங்களைக் காண்பது அரிதாகிவிட்டது.

32) விலைகொடுத்து கொல்லுயிர் மீட்டல், கொல்லுவதற்குக்கொண்டு செல்லப்படும் சிற்றுயிர்களை விலைகொடுத்து வாங்கி அவற்றைச் சுதந்திரமாய்ப் பறக்கவிடுதலான அறம். இதனைச் செய்யுமுன் ஒன்றை யோசித்துச் செய்யவேண்டும்.

ஒருவன் கொல்வதற்காகக் கொண்டுசெல்லும் ஆடு, மாடு, கோழிகளை விலைகொடுத்து வாங்கிச் சுதந்திரமாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவிட்டாலும் அவற்றை மற்றொருவன் பற்றிப்பிடித்து கொல்வதற்காகக் கொண்டுசெல்வான். மாறாக, ஒரு கூடை நிறையக் குருவிகள், கிளிகள், புறாக்கள், காடை கௌதாரிகளைப் பிடித்துக் கொண்டுவரும் குருவிக்காரனிடமிருந்து விலைகொடுத்து வாங்கி அவற்றைச் சுதந்திரமாகப் பறக்கவிடுவது மிகுந்த புண்ணியத்தைத் தரவல்லதான அறச்செயல். இதுவே முப்பத்திரண்டாவது அறமாகக் குறிப்பிடப்படுகிறது. அறம், அது பாரத மக்களின் வாழ்க்கைத் திறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

- எம் ஆலயங்களின் மகிமைகளை தன் கருவறையில் இருந்து பாடல்களாக எழுதிய மூளாயூர் ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும்,

- பாடல்களை உயிரோட்டம் கொடுத்த யாழ். ராஜன்ஸ் இசைக்குழு யாழ் ரமணன் (சட்டத்தரணி) தபேலா, மிருதங்கம் - சதா. வேல்மாறன், முகர்சிங் விமல்சங்கர், நாதஸ்வரம் வசந்தன், ஒக்டோபாட் பகனுசங்கர், கீபொட், கிற்றார் - யாழ். ரமணன், ஒலிப்பதிவு - G. முரளி குழுவினருக்கும்.

- பாடகர்களான S.C. சாந்தன், மெல்லிசைவாணர் ஜெயா சுகுமார், குமாரசுவாமி, ரகுநாதன், ஜெயரூபன், செல்வி ஜெகனி, செல்வி ரொசீட்டா குழுவினர்களுக்கும்,

- புகைப்படக்கலைஞர் கொழும்பு சுகந்தன் ஸ்ரூடியோ அவர்களுக்கும்,

- மலர் வெளியிடுவதற்கு விளம்பர உதவிகளைச் செய்த எம் புலம்பெயர் லண்டன்மாநகரில் வியாபாரத் துறையில் முன்னணி வகிக்கின்ற வியாபார நிறுவனங்களுக்கும் உள்ளூர் வியாபார நிறுவனங்களுக்கும்,

- ஒலிப்பதிவு நாடாவினையும் மலரினையும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தன் குல தெய்வங்களின் பக்தர்கள், அடியார்கள் அன்பர்களுக்கு பரவ வழி செய்த மூளாயூர் பே. அருளீசன் அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✎ இம்மலரின் சிறப்பிக்கு அருளாசி, ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரை தொகுப்புக்களை வழங்கிய ஆன்மீக ஞானனிகள், கல்விமான்கள் மற்றும் ஒலிப்பதிவு நாடா மலரினை வெளியிட்டு விழாவிற்கு எமது அழைப்பினை ஏற்று வருகைதந்த பிரதம விருந்தினர், கௌரவ விநருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் எம் சிரந்தாழ்ந்த நன்றிகள்.

நன்றி

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*விழாக்குழுவின் சார்பில்*

**மூளாய்** **கா. பார்த்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Sri Sugandan's Studio

- Digital Video Filming
- Editing
- Album Makers
- Photography
- VHS to DVD
- Duro Framing

289- 1/1, Galle Road,
(Opp. Wellawatta Police Station)
Tel : 0777 309638, 011 250 7265
Email : srisuganthans@yahoo.com

215/D, First Floor,
Kasthuriyar Road,
Jaffna.
Tel : 021 492 f1868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Malar Cash & Carry

# மலர் காஷ் & ஹரி

**543 WEMBLEY HIGH ROAD**

**WEMBLEY**

**HAO 2DJ**

malarsupermarket@hotmail.co.uk




**TEL : 0208 795 5797**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# ANGLO ASIAN Cash & Carry Ltd

## அங்லோ ஏசியன்
## காஷ் அன்ட் ஹரி (வரை)

**539 Nigh Road, Wembley**

**Middlesex,**

**HAO 2DJ .**



**Fax : 0218 903 0444**

**TEL : 0208 900 0444**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Vahizan Disc World

## வாகீசன் டிஸ்க் வேள்ட்

528 Ealing Road,
Wembley, Middx
HAO 4TQ



**Email : info@vahizan.com**
**www.hahizan.com**

***TEL : 020 8902 8828***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# GANESH Cash & Carry

## கணேஷ் காஷ் அன்ட் ஹரி

**UNIT 4 - 29/23,**
**EALING ROAD**
**LONDOND HA 0 4YA**



***TEL : 0208 900 0566***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# MARUTHY Entertainment

# மாருதி

## என்ரரெயின்மென்ற்

1st Floor 44A Ealing Road,
Wembley, Middx
HAO 4JL





**Mob : 079 85399 521**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Unit Win



- Net Browing
- E-mai
- Scanning
- Type setting
- Print out
- DVD & CD Writing
- DVD & CD sale
- MP3 Songs
- Stationary
- Fancy itmes

114, Arasay Road,
(Opp. Jaffna Hindu Ladies School)
Jaffna.
Tel : 021 222 0105
E-mail : karthiesu@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# BEST FOODS

## பெஸ்ட் பூட்ஸ்

**(1A - 13 EALING ROAD**
**WEMBLEY**
**HA3 IRE**






**TEL : 0208 900 0100**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

TEL: 0777556003,
0727556003
Email: v_balaraj@yahoo.com

# அலுறாஜ் அலுமினியம்



## பப்ரிகேசன்



டியூரோ பிரேம்

கிளாஸ் பிரேம்

அலுமினியம் சிவிலிங்

சோக்கேஸ்

அலுமினியம் கதவு, யன்னல்



சகல விதமான அலுமினிய வேலைகள்
அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும்
செய்து பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org